REGD. M. 4642.

# திராவிடநாடு

மலர் 6 | 24–8–47 | இதழ் 13



## சீனன் ஜடை.

பழமையின் பிடியிலிருந்து விடுபட மறுத்து வந்த சீன மக்களைத் திருத்த, சன்யாட்சன், அரும்பாடு பட்டார், ஆபத்துகளைப் பொருட்படுத்தாமல். சீன ஆடவன், தலையை ஜடைபோட்டு, 'பாம்பு' போல, விட்டுக்கொள்வதை, நாகரிகம் என்று மட்டுமல்ல, மதகாரியம் என்றே கருதினான் இதைக் கண்டித்த சன்யாட்சன் பேச்சைக் கேட்க மறுத்தான். சட்டம் இயற்றினபோதும், சட்டை செய்யவில்லை! பிறகு, தீவிர இளைஞர்கள் கிளம்பினர் — கத்திரிக்கோலுடன்! ஜடைகள், வீதிகளில் அறுபட்டு வீழ்ந்தன!!

16-ம் பக்கத் தொடர்ச்சி

நீயும் இரக்கமற்றவனல்ல ........ யார் குற்றவாளி என்று எனக்கே புரியவில்லையே. சேட் ரத்தன்லால், பசு, எறும்பு இவைகளிடம் கூட இரக்கம் காட்டுகிறான் — அந்த ஏழையிடம் மட்டும் இரக்கம் காட்டவில்லை — அவர்கள் வீட்டை ஏலத்தில் எடுக்கப் போகிறான்.

சீ. ம:- அதை வேண்டுமானால் தடுக்கலாம்........

சோ:- முடியாதே! அந்த அம்மாள், அழுதுகூடப் பார்த்தார்களாம்—அந்தப் பாவி இரக்கம் காட்டவில்லையாமே.

சீ. ம:-இந்தச் சீட்டுக்கு அவன்மரியாதை காட்டுவான், ஏழைக்கு இரக்கம் காட்டாவிட்டாலும்—கொண்டு போய்க் கொடு.

(சீட்டைத் தருகிறான்)
(இருவரும், சேட்கடை
சென்று அதைத்தர, சேட்
அதை வாங்கிப் படிக்கிறான்)

"சரிங்க! ஏலத்தை நிறுத்திப் போட்றேங்க! போய் வாங்க!........ என்றுகூறிவிடுகிறான். (வீதியில்வரும் போது இருநண்பர்களும்)

சோ:- இவ்வளவு நல்ல மனது இருக்கிறது—இருந்தும்........

பா:- காதலித்தவளைக் கைவிட்ட காரணம் என்ன என்று கேட்கிறாயோ!

சோ:- ஆமாம் — புரியவில்லையே.

பா:- எறும்புக்குச் சர்க்கரை தானம் செய்கிறவன் தானே, சேட்?

சோ:- ஆமாம்.

பா:- அந்த இரக்கத்தை அதே சேட் மனிதரிடம் காட்டுகிறானா?

சோ:- இல்லையே.

பா:- ஏன்?

சோ:- புரியவில்லை.

பா:- உனக்குப் புரியாது. கணக்கு எழுதும் அவனுக்குப் புரியும். இரக்கம் எறும்பிடம் காட்டுவது, அதிக செலவில்லை-மனிதர்களிடம் காட்டினால் செலவு அதிகம். குறைந்த செலவில், புகழை விலைக்கு வாங்குவதற்கு அவன் நடத்துகிறான், இரக்கம் என்ற பொருளைச் சரக்காகக் கொண்ட வியாபாரத்தை. அதே போலத்தான், சீமான் மகன், காதலுக்காக, அம்பாளைக் கலியாணம் செய்து கொண்டு, அதிக கஷ்ட நஷ்டம் ஏற்கத் துணிவு கொள்ளவில்லை. இதோ, கொஞ்சம் பணம் நஷ்டம், அவர்கள் பட்ட கடனை இவன் தீர்த்து வைப்பதால். அவனால் தாங்கக்கூடிய, சாதாரணச் செலவு. இந்தக் குறைந்த அளவு செலவு செய்து, இரக்கமுள்ளவன் என்ற பட்டத்தை அவன் பெற்று விடுகிறான். நண்பா! இத்தகைய விசித்திரமான வியாபாரம், பலப்பல.

சோ:- இந்த நிலைமையை மாற்ற முடியாதா?

பா:- இரக்கத்தின் அருமை பெருமைகளை எடுத்துக் கூறுவதால் முடியாது. எல்லோரையும் உத்தமர்களாக்குவது, என்ற உபதேசமார்க்கத்தால் முடியாது. ஒருவருடைய இரக்கத்தால் தான் வாழ முடியும், என்ற நிலைமை மக்களிலே பலருக்கு இன்று இருக்கிறதே, அந்த நிலைமையே மாறவேண்டும். அந்த நிலைமையை உண்டாக்கி வைக்கும் முறை மாறவேண்டுமானால், சோமு! மக்கள் மன்றத்திலே, காசி க்ஷேத்ர மகாத்மியம் பேசப்படுவது குறைக்கப்பட்டு, மாஸ்கோ மணத்தின் மாண்பு எடுத்துரைக்கப்பட வேண்டும் அதிகமாக. உதவிசெய்— உத்தமன் என்று புகழப்படுவாய் என்று பேசப்படுவதற்குப் பதிலாக, உரிமையைக் கொடு! உலகத்தைக் கெடுக்காதே! என்று பகுத்தறிவு மொழி கூறப்படவேண்டும்.

[சோமு ஆழ்ந்த சிந்தனையில்
ஈடுபட்டு விடவே, பானு,
அவனிடமிருந்து விடை
பெற்றுக்கொண்டு,
போகிறான்.]

✲

## தஞ்சையில்

நகைச்சுவை அரசர்

N. S. கிருஷ்ணன் அவர்கட்கு

## வரவேற்பு

——

தஞ்சை ஆஸ்பத்திரி மைதானத்தில் 3—8—47 ஞாயிறன்று மாலை 5-30 மணிக்கு, தோழர் A. Y. அருளானந்தசாமி அவர்கள் தலைமையில் பொதுமக்கள் சார்பில், நகைச்சுவைஅரசர் N. S. கிருஷ்ணன் அவர்கட்கு வரவேற்பு நடைபெற்றது. தலைவர் அவர்கள் கலைவாணரை வரவேற்று சொற்பொழிவாற்றினார். K. R. இராமசாமியின் கிருஷ்ணன் நாடக சபையாரால், பொதுமக்கள் சார்பில் வாழ்த்துக்களும் மாலையும் அணிவிக்கப்பட்டது. சங்கங்கள் மன்றங்கள், கழகங்கள், வாசகசாலைகள், மூலம் வாழ்த்துகளும், மாலைகளும், அணிவிக்கப்பட்டன. நகைச்சுவை அரசர் தோழர் என். எஸ். கிருஷ்ணன் அவர்களைப் பாராட்டி, தோழர்கள் வெங்கடகிஷ்ணன் C. N. அண்ணாத்துரை பாராட்டுரை பொழிந்தனர். பின்னர் சுமார் ஐம்பதினாயிரம் மக்கள் கைதட்டலுக்கிடையே, கலைவாணர் தோழர் என். எஸ். கிருஷ்ணன் அவர்கள், தான் சிறை சென்ற காரணத்தையும், அங்குதான் அநுபவித்ததையும், தனக்கே உரித்தாயுள்ள நகைச்சுவை மூலம் சொற்பொழிவாற்றினார், பாடினார், கூட்டம் இனிது முடிவுபெற்றது.

——

## இனி

இதுகாறும் தென்னாடு வாளாகிடந்தது. காரணம் காங்கிரஸ் பற்றேயாகும். இப்பொழுது ஒருவித விடுதலை கிடைத்துவிட்டது. இனி தென்னாடு வாளா கிடத்தல் கூடாது. வாளா கிடந்தால் நாடு பலதிற இன்னல்களால் தாக்குண்டு பாழ்படும்; இருகூறுடன் நில்லாது இன்னும் பல கூறுபட்டு அல்லலுறும். தென்னாடு முனைந்தெழுந்து பொருந்திய தொண்டாற்றுதற்குரிய காலம் இதுவே. தென்னாடு விழித்தெழுவதாக.

தென்னாட்டின் இயற்கை அமைப்பும், அதனால் முகிழ்த்த பண்பும் சாம்ராஜ்ஜியத்துக்கு மாறுபட்டவை; சமதர்மத்துக்கு இயைந்தவை. வடநாட்டு ஆதிக்கத்தால் தென்னாடு தனக்குரிய பண்பையும் மறந்தது. இப்போது கிடைத்துள்ள ஒருவித விடுதலை தென்னாட்டின் மறப்பைப் போக்குவதாகும். ஆதலின், தென்னாடு விழித் தெழுந்து, தனது கடமையை உணர்ந்து நடப்பதாக.

இப்போது பெற்ற விடுதலை காரணமாகக் காங்கிரஸ் மறைந்துவிடுமென்று எதிர்பார்க்கப்பட்டது. காங்கிரஸ் இப்போது மறையாது என்று தெரிகிறது. வடநாடு காங்கிரஸைச் சாம்ராஜ்ஜிய வழியே ஈர்க்க முயலும். தென்னாடு அதைச் சமதர்ம வழியில் ஈர்க்க முயலல் வேண்டும்.

திரு. வி. க.

"வேளாளன்"

வேளாள சமூக மாதப் பத்திரிகை

தனிப்படி 4 அணா

ஆண்டு சந்தா ரூ. 3/-

எல்லா ஊர்களிலும் விற்பனையாளர் தேவை.

வேளாள நிலையம்

பவானி (வழி) ஈரோடு.

இலங்கை 15 சதம் மலாய்நாடு 12 காசு

விலை 2 அணா

திராவிடநாடு

ஆண்டுசந்தா ரு 7

# செங்கோல்

## ஒருவேண்டுகோள்

புது சர்க்காருக்குப் பிரதமராக வந்துள்ள பண்டித நேருவுக்கு, திருவாவடுதுறை ஆதீனகர்த்தா ஒரு செங்கோல் அனுப்பினார்.

அது5-அடிஉயரமாம்!அசல்தங்கத்தால்செய்யப்பட்டதாம்! அழகாகவும் இருக்கிறதாம்! செங்கோல் அளித்தது, ஏன்? பரிசா? காணிக்கையா? பாகமா? லைசென்சு கட்டணமா? ஏதும் விளங்கவில்லை.

எதிர்பாராதது! அம்மட்டோ! அவசியமற்றது! அவசியமற்றதாக மட்டும் இருந்தால்கூடப் பரவாயில்லையே. அதனுள் புதைந்துள்ளஆழ்ந்த பொருளைச் சிந்தித்தால்ஆபத்தன்றோ மெள்ள மெள்ளத் தெரிகிறது.

பண்டிதர், அந்தச் செங்கோலைக் கண்டு, என்ன எண்ணினாரோ,நாமறியோம். ஆதீனகர்த்தா, கோலுடன் வேறென்ன ஓலை தந்தனுப்பினாரோ, நாமறியோம்.

நாம், கூறஒன்றிருக்கிறதுபண்டித நேருவுக்கு. அந்தச் செங்கோலைப் பெற்றுக்கொண்ட உமக்குச் சில சொற்கள்—

பாரிலே உள்ள பல நாட்டு வரலாறுகளை நீர் அறிவீர். முடிஅரசன் –அவனைச்சுற்றி குடிமக்களைஉழைக்க வைத்து, அதன் பலனை உண்டு கொழுக்கும் சீமான்கள் பரிவாரம்— இந்தத் தங்கக் கோட்டையினுள்ளே, தாராளமாக உலவும் அனுமதியும் வசதியும் பெற்ற மதத்தைமுதலாகக் கொண்டோர் உள்ளனர் என்பதை அறிவீர். மக்களாட்சி மலருவதற்கு இத்தகையவர்கள் நீக்கப்பட வேண்டும்என்றவரலாற்று உண்மையையும் அறிவீர்கள். அறிந்ததை, ஆட்சி முறையிலே புகவைக்கமுயலுவீரோ, என்ற அச்சம் கொண்ட ஆதீன கர்த்தாக்கள், செம்பொன்னால் செய்யப்பட்டது மட்டுமல்ல, நவரத்னங்கள் இழைத்த செங்கோலையும் தர முன்வருவர், தற்காப்புக்காக! பதிகம்பாடிப் பரமன் அருளைத் தேடி, அற்புத சக்தியால் செய்யப்பட்டதல்ல! அரனடியார் ஒருவர் செய்ததாகக் கூறப்படும் நரிபரியான கதை போல, இரும்புத்துண்டை ஒரு துளி விபூதி தூவி ஓம் நமசிவாயா எனும் மந்திரம் ஓதி செம்பொன் ஆக்கிச் செய்யப்பட்டதல்ல! பிறர் உழைப்பு--இவருடையதானம். இதுதான் அந்தச் செங்கோல்! பெயர், பொருந்துமா?

அந்தச்செங்கோல்-ஐந்தடி உயரம்.

அழகிய வேலைப்பாடமைந்தது.

பசும்பொன்னால் செய்யப்பட்டது.

அளித்தவரோ, சாமான்யரல்ல—ராஜகுடும்பமோ? அல்ல, அதற்கும் மேலே! பூர்வீகபரம்பரையோ? பூர்வீக பரம்பரையா, நேற்று முளைத்ததா, என்பதல்ல முக்கியம், பரம்பரை, கேவலம், பூலோகவாசிகளின் வழிவழி அல்ல—திருக்கைலாயபரம்பரை!

* * *

அண்ணேன்! ஏது, நமது ஆதீனத்துக்குத் திடீரென்று........

தேசபக்தி பொங்கி வழிகிறதே என்று கேட்கிறாயா, தம்பி!

இல்லெ அண்ணேன், பொங்குவதும் வழிகிறதுந்தான் இங்கு பழங்கதையாச்சே—ஆதீனத்தின் திருப்பார்வை, இப்படி, அரசியல் மீது பாயக்காரணம் என்ன, என்று கேட்டேன்.

காரணம் கிடக்கட்டும் தம்பி! எனக்கு அந்தக்காரணத்தைக் கண்டுபிடிக்க வேண்டுமென்பதிலே கூட அவ்வளவு பிரியம் இல்லை—ஆனா விளைவு என்ன ஆகும் என்பதை எண்ணும் போது தான்........

ஏன்? என்ன ஆகும் விளைவு?

செங்கோல், செம்பொன்னால் தான் செய்கிறோம் — வேலைப்பாடு முதல்தரமாகத்தான் இருக்கப்போகிறது. இரவுபகலாக உட்கார்ந்து வேலை செய்கிறோமே!

ஆமாம்! அதனாலே அழகும் அந்தஸ்தும் ஏற்படும், செங்கோலுக்கு. ........ஆனால் இதை அனுப்பிவைப்பதன்மூலம், ஆதீனம்,தன்பார்வையை அந்தப்பக்கம் செலுத்துவது தெரிகிறதல்லவா? ஆதீனத்தின் பார்வை பட்ட காரணத்தாலே, ஏற்படபல விதமான விளைவுகளைப்பற்றி,யோசிக்கும் போது........

அடாடா! நீங்க, அதை எல்லாமா எண்ணிக்கொண்டு, ஆயாசமடைவது? இது வேறுபார்வை—அது வேறுபார்வை அல்லவா?

இருக்கலாம் தம்பி, இருக்கலாம். ஆனால் இரண்டுக்கும் பார்வைக்குமுள்ள ஒரேகாரணம், ஆசைதானே!

ஆமாம்.

ஆதீனத்தின் ஆசை, புதிய அரசாங்கத்தின்மீது பாய்வது, நல்லதா? —அதுதான் என்கேள்வி — எனக்குள்ள பயமும் அதுதான். அருமையான செங்கோல்—நல்ல வேலைப்பாடு—ஆனா, இதைக் கையிலேவைத்துக்கொண்டு, ஆட்சி நடத்தினால்....

தம்பி! இதிலே உள்ள தங்கம், தரித்திரத்தைக்கூடப் பொருட்படுத்தாதவன், பகல் பட்டினி, ராப் பட்டினி கிடந்தவன், மற்றவன் பொருளை மோசம் செய்தவன், மார் உடையப் பாடுபட்டவன், கூலியைக் குறைச்சவன், உழவனுடைய வயிற்றிலே

அடிச்சவன், கொள்ளை இலாபக்காரன், கொடுத்த கடனுக்கு நாமத்தைக் குழைச்சிப் போட்டவன், இப்படிப்பட்டவன்களெல்லாம் கூட, செய்ததை மறைக்க, பாவத்தைக் குறைக்க, பகவானையே ஏமாற்ற, கொடுத்த காணிக்கை, இருக்குதே, அதுதானே. அதுவுந்தானே இருக்கும். புத்தம் புதிசா ஆரம்பிக்கிற ஆட்சிக்கு, இப்படி, புத்தியைச் சுரண்டிப் பிறகு வாழ்வையே சுரண்டி விடுகிற வழக்கத்தை முதலாக வைத்து வியாபாரம் செய்கிற வர்களிடமிருந்து, செங்கோல் கிடைத்தா,........ஆட்சி, சரியாவா இருக்கும்?

நீங்க ஒரு வேடிக்கை அண்ணேன்!

வேடிக்கை அதிகமில்லேடா தம்பி! வேதனை இருக்கு அதிகமாக.

* * *

செங்கோல் செய்தவர்கள் இது போலப் பேசியிருக்கமாட்டார்கள். ஆனால், இதுபோன்று எண்ணமிருந்திருக்க முடியாது!

* * *

ஐயர் :—ஆஹா! பொது சிலாக்யம்! சிரேஷ்டமான காரியம். சகலரும் பாராட்டுவா!

அதிபர்:—செங்கோலின் உயரம் ............

ஐயர்:—ஐந்து அடியாம்! செம்பொன்னும். சொன்னு! தங்களுடைய கீர்த்தியோ, ஐந்து யோசனை உயரம் உயரும்.

அதிபர்:- பேப்பர்காராளெல்லாம் கூட........

ஐயர்:—அவாளைத் தள்ளுங்கோ—படம் போடுவா, பாராட்டி எழுதுவா—பெரிய பெரிய மனுஷா—அயல் தேசத்திலே இருந்தெல்லாம் வந்திருப்பா, அமெரிக்கா, ஐரோப்பா, முதலிய பல இடங்களிலிருந்து — அவாளெல்லாம், செங்கோலைக் கண்டாளான்னு, ஆஹா! பிரமிச்சிப் போவா.

அதிபர்:—ரொம்ப அழகான முறையிலேதான், பத்தர்கள் தயாரிக்கிறு.

ஐயர்:— வேலைப்பாடுகூடக் கிடக்கட்டும். அதுவும் நன்னுத்தான் இருக்கும். ஆனு, அதைக்கூடக் கவனிக்கமாட்டா — இந்த முகூர்த்த வேளையிலே, இப்படிப்பட்ட சிலாக்யமான செங்கோலைத் தரவேணும்னு, இந்தியா பூராவிலேயும், உள்ள படே படே ராஜாக்கள், பரோடா, ஜெயபூர், உதயபூர், மைசூர், எந்தராஜாங்கத்துக்கும், உதிக்கல்லே, ஆதீனத்துக்கு, அந்த அன்பும், அக்கரையும், அபிமானமும், ஏற்பட்டது பாருங்கள் என்னு, ஒவ்வொருவரும் பேசிப் பேசிப் புகழமாட்டாளா? செங்கோலைப்பற்றி ஒரு நிமிஷம் பேசுவா, இரண்டு நிமிஷம் பேசுவா, ஆனு, தங்களைப் பற்றியோ, நாளெல்லாம் பேசுவாளோல்லியோ?

அதிபர்:—ஆமாம்—எப்படி நமது யோசனை?

ஐயர்:—வேறு யாருக்கு வரும்! ராஜா கையிலே இருப்பது செங்கோல்—முதல் ராஜாங்கத்துக்குச் செங்கோல் கொடுத்தது யார்? ஆதீனம்! அதாவது, ஆதீனம் பார்த்து ஆசீர்வதித்து, அனுமதி தந்து, புது ராஜ்யம் ஆரம்பமாகலாம்னு முத்திரை தருவதுபோல, செங்கோலும் கொடுத்த பிறகுதான், புதுராஜாங்கமே ஆரம்பமாச்சுதுன்னு, சகலரும் பேசுவா—இப்ப மட்டுமல்ல—எதிர்காலத்திலும்.

இப்படிப்பட்ட, பேச்சு நடந்திருக்கக் கூடும்.

* * *

செம்பொன் தன்னுல் ஆக்கித்
திருவருளை இழைத்திழைத்து
வம்பொன்றும் வாராமல்
வாழ்க இந்த அரசு என்று
எம்மானைப் பெம்மானை,
ஏறுடைய எம் சிவனை
வேண்டியே, அருள்பெற்று
வேண்டியமட்டும் சேர்த்துச்
செங்கோல்தனைச் சமைத்தார்,
எங்கோவாம், ஆதீனத்தார்.

என்று புலவர் பாடி இருப்பார், இந்தச் சம்பவத்தைச் சிறப்பிக்க ஓர் பாடல். சைவ மெய்யன்பருக்குத் திருப்தி இருந்திராது. சீற்றம் பிறந்திருக்கும்—காரணத்தோடு.

சைவர்:—பாசுரம் பாடுகிறீர்—பாசுரம்! ஓலைச்சுவடியும் கையுமாக ஓராண்டா, ஈராண்டா, பத்தாண்டுகளாக உள்ளீர். பழுத்த பூசனியென வயிறு பருத்ததன்றி, புலமை காணேமே?

பு:— கவிதையிலே, குறை உளதோ?

சை:— அதில் மட்டு மிருப்பின் பொறுத்திடலாமே! யூகம் இல்லையே! பாசுரம் எதுக்குப் பாடுகிறீர்?

பு:- ஆதீனச் சிறப்பை விளக்க!

சை:- ஆதீனச் சிறப்பா? இருக்கும் சிறப்புடன் இன்று புதிதாக ஆதீனம் தனிச்சிறப்புப் பெற, செங்கோல் சமைத்து அனுப்பும் சம்பவமன்றோ முக்கியம்? அதற்கன்றோ பாடல்?

பு:- ஆம்!

சை:- அங்ஙனம் என்று, உமது பாடலில் எங்ஙனம் விளக்கியுள்ளீர்? செங்கோலின், பருமன், உயரம், எடை, அழகு, இவைபற்றிய குறிப்பெங்கே? முக்கிய அம்சமன்றோ? சம்பவத்தின் சிலாக்கியம் அப்போதன்றோ விளங்கும். செய்யுளிடும், முதலில் செய்யுளை! பிறகு உம் புத்தியை........!

அடி ஐந்துஉயரம் ஆகும்
ஆனதோ அழகானசெம்பொன்
வடிவழகு கொண்டதாம்வேலை
ஞாலம் புகழ்ந்திடுமாம்
எஞ்ஞான்றும் இங்ஙனே!

பாதகமில்லை! போம்! என்று கூறி, சைவ மெய்யன்பர், புலவரை அனுப்பிவிட்டு, பாடலை, பக்தர்களுக்குச்சமர்ப்பித்து இருக்கக்கூடும்—புகழைப் பதிவு செய்து கொள்ளும் முறை அது.

செங்கோலைச் சமர்ப்பிக்க வந்த கூட்டத்தில், சிவந்த மேனியும், கலைக்கண்களும் படைத்தவர் ஒருவர், கட்செவியும் மயங்கும் வகையில் நாதஸ்வரம் வாசித்திட்டது அறிவீர். அவரைக் கண்ட பலர், என்ன பேசிக்கொண்டிருப்பர்?

* * *

யார் இவர்?

நாதஸ்வர வித்வான்!

ஓஹோ! இவர் வந்துள்ள காரண ?

செங்கோலைத் தருவதற்கு, ஆதீனம் இவரை அனுப்பியிருக்கிறார்.

செங்கோல் தரும் ஆதீனம் எப்படி இருப்பார்?

சிவப்பழமாக!

என்ன வேலை செய்கிறார்?

ஆதீனத்தை நடத்துகிறார்!

எங்ஙனம்?

உரத்த குரலில் கூறட்டுமா,

(13-ம் பக்கம் பார்க்க)

# அவர்கள் உள்ளம்

ஆயிரம் இருக்கட்டும் சார். பட்டப்பகலில், பலரறிய, மாநாடு நடத்தி, அதிலே நமக்குள்ளே இருக்கும் குறைபாடுகளை எடுத்துக் கூறுவது, எதிர்க்கு இளப்பம் அல்லவா? எதிர்க்கட்சிக்காரர் எவ்வளவு கேவலமாகப் பேசுவர்! தலை இறக்கமாக அல்லவா இருக்கிறது. ஒருபெரிய மகத்தான தேசிய ஸ்தாபனத்திலே உள்ளவா, இப்படியா பொறுப்பற்று நடப்பது? நம்ம மந்திரிராஜன் வேலையில் இருக்கவேகூடாது என்று பகிரங்கமாக, மாநாட்டிலே தீர்மானம் நிறைவேற்றிஞ, சார்! இவாளெல்லாமா, காங்கிரஸ்காரா? இவாளா, ஊழியர்? செச்சே! இப்படிச்செய்வதை நாம் அனுமதிக்கவே படாது.

* * *

காங்கிரஸ் ஊழியர்கள் மாநாடு, சென்றகிழமை சென்னையில் நடைபெற்றது. அங்கு ஊழியர்கள், காங்கிரசுக்குள் இருக்கும் நிலைமையைப் பகிரங்கமாகப் பேசினர். சென்னை மந்திரி சபையிலே ஒருவராக உள்ள டாக்டர் ராஜன், பதவியிலிருந்து விலகவேண்டும், என்று தீர்மானம் நிறைவேற்றினர்.

இந்தப்போக்கு, காங்கிரசின்ஸ்தாபனகர்த்தாக்களுக்குப் பிடிக்கவில்லை. எனவே அவர்கள், காங்கிரஸ் ஊழியர்மாநாட்டைக் கண்டித்ததுடன், அந்த மாநாட்டிலே கலந்துகொண்டவர்கள், உண்மைக்காங்கிரசார் ஆகமாட்டார்கள் என்றும்கொதிப்புடன் பேசினராம்.

ஆனல், அவர்கள்செய்தது தவறு? காங்கிரசின் உயர்வுக்காக உழைத்த அவர்களுக்கு, அதன் நடைமுறை நல்லவிதமாக இருக்க வேண்டும் என்று எடுத்துக்கூறவும் உரிமை கிடையாதா? பொறுப்பற்ற செயலாகுமா அது! ஜனநாயக உணர்ச்சியை மதிக்க மறுப்பவர் தவிர மற்றவர்கள் யாவரும் காங்கிரஸ் ஊழியர்கள் கொண்டபோக்குத் தவறுஎன்றுகூற மாட்டார்கள். நெடுங்காலமாகக் கட்சிக்கட்டுப்பாடு, எதிரி கண்டு எள்ளி நகையாடுவான் என்ற பீதி கிளப்பியே, காங்கிரஸ் ஊழியர்களை, மனதிலுள்ளதை எடுத்துப்பேசவும் முடியாதநிலை ஏற்படுத்தி வைத்திருந்தனா, அந்தப்பாறை உடைத்து எறியப்பட்டது. உள்ளத்தில் தோன்றுவதை அவர்கள் எடுத்துரைத்தனர். "விடுதலை" செய்ததுபோலவே, நேர்மையாகத்தமது கருத்தை எடுத்துக்கூறிய காங்கிரஸ் ஊழியர்களின், துணிவை நாமும், பாராட்டுகிறோம். ஜனநாயக ஒளி வீசினலொழிய, நல்லாட்சி அமைக்கமுடியாது—ஊழியர்கள்பட்டகஷ்டங்களெல்லாம கூட, நாளாவட்டத்திலே, பட்டுப்போகும். இந்தப்போக்கைக் காங்கிரஸ்ஊழியர்கள்கொண்டது கண்டு, அவர்களைக் காங்கிரஸ் தலைவர்களிலே சிலர், கண்டிக்கக்கூடும், ஏசக்கூடும், சந்தேகிக்கக்கூடும், சபிக்கக்கூடும். உண்மைத்தொண்டு புரிந்தோம், புரிகிறோம், புரிவோம், என்ற எண்ணம் உள்ளத்தில் இருக்கும்போது, இந்தப் பழிசுமத்து படலத்தைக்கண்டு, வருத்தமோ, கோபமோகொள்ளவேண்டியதில்லை. பொதுவாழ்விலே, பல ரகமான பரிசுகள்! அதிலே இது ஒரு ரகம்! அவ்வளவுதான். வேறில்லை. மிக மிகக்கட்டுப்பாடு வாய்ந்தது, என்று கூறப்படும் ஸ்தாபனத்திலே இருந்துகொண்டு, ஜனநாயகஉணர்ச்சியைக்கைவிடாமல், தமது கட்சியிலே எந்தப்போக்குத் தவறு என்று மனதுக்குப்பட்டதோ, அதைத் தைரியமாக எடுத்துக்கூறிய காங்கிரஸ் ஊழியர்களை, நாம் பாராட்டுகிறோம்—புன்னகையும் பெருமூச்சும் கலந்த நிலையில்.

* * *

இந்த மாநாட்டின்போது மட்டும் அல்ல, பிரகாசம் மந்திரி சபையினர் கொண்டுவந்த, 'ஆலைஒழிப்பு' திட்டத்தின்போது, காங்கிரஸ் ஊழியர்கள் அல்ல, காங்கிரசைப் பலமுள்ள ஸ்தாபனமாக்கிப் பணிபுரியும், காங்கிரஸ் பத்திரிகைகள், திட்டம்தவறு, பொருளாதாரச் சீர்கேட்டினை உண்டாக்கும் என்று எடுத்து எழுதின. அந்த ஜனநாயக உணர்ச்சியின் வெற்றிதான் இப்போதைய மந்திரி சபை, அந்தத்திட்டத்தைக்கைவிட்ட காரணம். இதனல் நாட்டு மக்கள் அடைந்தபலன்அதிகம். திட்டத்தை அந்தப் பத்திரிகைகள் கண்டித்து எழுதியபோது, காங்கிரஸ்பத்திரிகைகளேவா, காங்கிரஸ் திட்டத்தைக் கண்டிப்பது என்று பேசினவர்கள் அனேகர். எதிர்க்கட்சியினரான நாமும், அந்த ஏடுகளின் திட்டக் கண்டனங்களைப் பயன்படுத்திக் கொண்டோம். எனினும், அந்த ஏடுகள், ஜனநாயக உணர்ச்சியின்படி நடந்து தீரவேண்டும் என்ற உறுதி கொண்டு, ஆலை ஒழிப்புத்திட்டத்தைக்கண்டித்தன. இதனல் நாட்டுக்கு இலாபமே தவிர, நஷ்டம் ஏற்படவில்லை. காங்கிரஸ் கட்சிக்கும் இதனல் நஷ்டம் ஏற்படவில்லை. அந்த ஒரு திட்டத்தை அந்தஏடுகள் கண்டித்தனவே தவிர, கட்சிப்பிரசாரம் புரிவதிலே வழக்கமாக வேலை செய்து வருவதுபோலவேஇருந்தன. எனவே, காங்கிரசுக்கும் இந்தப் போக்கு நஷ்டத்தை உண்டாக்கவில்லை. ஜனநாயக உணர்ச்சியின் தன்மையே அவ்விதமானதுதான். முதலிலே சந்தேகம், பீதி, கோபம், கண்டனம் இவைகளைத்தான் கிளப்பும், முடிவோ, நாட்டை வாழவைக்கும்.

* * *

வெள்ளைக்கார ஏகாதிபத்யம் கொண்டுவந்து, இந்தத் துணைக்கண்டத்திலே வைத்திருந்த பட்டாளங்கள் சீமைக்குத் திரும்புகின்றன! இரண்டு நூற்றாண்டுகளுக்கு மேலாக இங்கு தங்கி, நாட்டை அடிமைப் படுத்தியும், புரட்சி வாடைவீசினல், பொசுக்கியும் வந்த படை, வெளியேறுகிறது! அதற்கு, மவுண்ட்பேட்டன் பிரபு, வழிஅனுப்பு உபசாரம் செய்தனுப்பினர்! வரலாற்றிலே மிக மிக வேடிக்கையான பகுதி இது. இன்னும் சில காலத்தில், இங்கிருந்து, சகல வெள்ளைப் பட்டாளமும், வெளி ஏறி விடும். நாட்டுப் பாதுகாப்புப் பொறுப்பு முழுவதும், இங்கு ஏற்பட்டுள்ள புதிய சர்க்கார்களி[illegible] சேருகின்றன.

வெள்ளைக்காரர்கள் வாழத்தெரிந்தவர்கள்—மேனட்டினரிலேயே அவர்கள் தனிவகை! இன்றும் கூட, உண்மையைக் கூறுவதானல், அவர்களிடம், இந்தத் துணைக்கண்டத்தை அடக்கி ஆளு[illegible] படை பலம் இருக்கிறது. உலகம் அவர்களின் போக்குக்கண்டு எதிர்க்கும் என்று பயந்து அவர்கள் போய்விட்டார்கள் [illegible] யாது; ஏனெனில், உலகப் பாதுகாப்

புக்கும் சமாதானத்துக்குமாக அமைந்துள்ள சங்கம், பங்கப்பட்டுக் கொண்டு வருவதைத்தான் பார்க்கிறோம். இந்த நிலையிலே, இந்தியாவில் 'இரத்தக்கிளறி' உண்டானால் கூட, பிரிட்டனை உலகம், தட்டிக்கேட்கும் என்றும் கூறிட முடியாது. இந்த அளவு வசதி இருந்தும், பிரிட்டன், விலகுகிறது! பிரிட்டனைவிட, இன்றும், பொருளாதார பலம், படை பலம், என்பவை குறைவாகஉள்ள பிரன்சு, டச்சு, போர்ச்சுகல் ஏகாதிபத்யங்களே செய்யும் அட்டகாசம் கொஞ்சமல்ல.

பிரிட்டிஷ் பிடி நீங்கினால் எங்களுக்கென்ன? நாங்கள், எமது சாம்ராஜ்யத்தை விடமாட்டோம, என்று அவைகள் பேசுகின்றன. பொதுமக்களின் கிளர்ச்சி, உள்நாட்டுப்புரட்சி, எதையும், அவை, சட்டை செய்ய மறுக்கின்றன. ஆயுதமெடுத்துப் போரிடவும், தனி அரசாங்கமே அமைக்கவும், உலகிலே பல நாடுகளின் நல்லெண்ணத்தையும் ஆதரவையும் பெறவுமான நிலைபெற்ற, இந்தோனேஷியாவிலே, டச்சுஏகாதிபத்யம், போர் நடத்துகிறது--விடுதலை வழங்க மறுக்கிறது. இவ்வளவுக்கும், அந்த ஏகாதிபத்யங்கள் இங்கு கொண்டுள்ள இடங்களோ, மிகமிகச் சிறிய அளவு! பரந்த துணைக்கண்டத்தைப் பிரிட்டன், விட்டு விலக, சின்னஞ்சிறு துண்டுகளை இந்த ஏகாதிபத்யங்கள் விட மறுக்கின்றன! காரணம் என்ன? சிறுமதி! வாழத்தெரியாத வக்கிரங்கள் அவை! தட்டிக் கேட்கும் அளவுக்கு 'இந்தியா' வளர்ந்துவிட்டது,ஏன்,நாம், மேலும் மேலும், அதை அடக்கி ஆள்வதன் மூலம், வீணான தொல்லையையும் நஷ்டத்தையும் பழியையும் பலகீனத்தையும் நாமாகத் தேடிக்கொண்டு மனக்கசப்பை வளர்த்துக் கொள்ள வேண்டும்-நாமாகவே, நல்லெண்ணத்துடன், இந்தியாவுக்குச் சுதந்திரம் தருவதாகக் கூறிவிட்டால், பழைய குரோதமும்மாறி, புதுஉறவும் ஏற்படும், என்று யூகத்துடன் பிரிட்டன் நடந்து கொண்டது. வாழத் தெரிந்த நாடு, பிரிட்டன். எனவேதான் உலகிலே ஏற்படும் போர்ப்புயலிலே சிக்கினாலும், சமாளித்துக் கொள்ளும் திறமை ஏற்படுகிறது. இப்போது பிரிட்டன், தனக்குப்புது உறவு ஏற்படுத்திக்கொண்டு விட்டது, இந்தியாவிலே, இரு புதிய சர்க்கார்களை அமைப்பதன்மூலம். இந்தச்சர்க்கார்கள், தத்தமது, தூதுவர்களை, உலகிலே உள்ள பல நாடுகளுக்கும் அனுப்புகின்றனர், எப்போது விரும்பினாலும், இருசர்க்காரும், பிரிட்டிஷ் சாம்ராஜ்யத் தொடர்பிலிருந்து விலகுவதாக அறிவித்து விடலாம். இருந்துதான் தீரவேண்டும் என்று வலியுறுத்தும் அதிகாரம் பிரிட்டனுக்குக் கிடையாது. டோமினியன் என்ற பழைய வார்த்தைக்கு உள்ள பொருளைவிட, இப்போது, இந்த இரு டொமினியன்களுக்கும் உள்ள அதிகாரத்தைக் கவனிக்கும் போது வேறு பொருள் கொள்ள வேண்டி இருப்பதால், டோமினியன் என்ற வார்த்தைகூடாது,வேறு, பொருத்தமான, புதியநிலைமைக்கு ஏற்ற புதுப் பெயர் தயாரிக்க வேண்டும் என்று, சின்னாட்களுக்கு முன்பு நிபுணர்கள் பேசினர். இத்தகையபுதுநிலைமையைப் பிரிட்டன் அளித்து, புதுஉறவு ஏற்படுத்திக் கொண்டது,வாழத்தெரிந்த காரணத்தால்.

ஒரு நாடு மற்றோர் நாட்டை, அதிலும் தங்கம் விளையும் நாடு என்று புகழப்படும் இந்தப் பரந்த துணைக்கண்டத்தை, எளிதிலே விட்டு விடத் துணியுமா? கடைசிப் பட்டாளம் இருக்கும்வரையில் போராடி, அடியோடு முறியடிக்கப்பட்ட பிறகு தானே, பணியும். போர்க்களத்திலே சந்தித்தான பிறகுதான், புது நிலைமை பிறக்கும். அப்படிப் பிறக்கும் புதிய நிலைமையில், இப்போதுள்ளதுபோல, ஒரு வெள்ளைக்காரர், இங்கு, 'வேலையில்' இருக்க மாட்டார்—அவரும் சம்மதிபார், இங்கும் அனுமதிக்கமாட்டார்கள். ஆனால் இப்போது, மவுன்ட்பேட்டன், சுதந்திரப் பிரகடனத்தை வெளியிடும், காட்சிகாணப்படுகிறது. உலகிலே வேறு எங்கும் காணாத காட்சி. வெள்ளைக்காரனை; ஏன் வேலையில் வைத்துக்கொள்வது என்று, தோன்றும். அதிலே அர்த்தமும் இருக்கிறது—முக்யத்துவமும் இருக்கிறது. மவுன்ட் பேட்டன், புதிய சர்க்காரின் சட்டத்துக்கு அடங்கி நடக்கும், அதிகாரி! உலக வரலாற்றிலே, ஒரு கீழ்நாட்டுக்கு, மேனாட்டவர், கீழ்நாட்டுச் சட்டதிட்டத்துக்கு அடங்கி நடப்பதாக 'சத்யம்' எடுத்துக்கொண்டு, வேலை செய்ததில்லை! அதுவும் இப்போது நடக்திடக் காண்கிறோம். ஒரு காலம் இருந்தது, வெள்ளையர் ஏறிச் செல்லும் ரயிலில், நம்மவர் ஏறிவிட்டால் வெள்ளையன் வெகுண்ட நாட்கள்—ஓராண்டுக்கு முன்பு, டாக்டர் இலட்சுமணசாமி முதலியாருக்கு நடந்தது, இந்த 'அவமரியாதை.' இவ்வளவும், அதிசயமாக மாறிப் போன காரணம் என்ன? வெள்ளையன் வாழத் தெரிந்தவன்—எனவே சமயமறிந்து, நடந்துகொண்டான்.

*      *      *

இரு அரசுகளிலும், பிரசங்கங்கள் நடைபெற்றன—ஆட்சி அமைத்து விட்டோம், ஆனால்இனித்தான், முக்கியமான வேலை நடந்தாகவேண்டும் என்று பேசினர். வேலை என்றால், சாமான்யமானதாக இல்லை! என்னென்ன நியாயம்கூறி, வெள்ளையனை வெளியேறச் சொல்லி வந்தோமோ, அதேவிதமான நியாயம் கூறி, திராவிடம், வடநாட்டு ஆதிக்கக்காரரை வெளியேறச் சொல்கிறார்கள். இந்தப் பிரச்னைக்கு, சிறை, படை, இவைகள் பதிலாகாது. இது, தீர்க்கப்பட வேண்டும். இதற்கிடையே, முதலாளிமார்களிடமிருந்து நாடு மீளவும், மக்கள் வாழவும் வழி வகுக்கவேண்டும். நல்வாக்குக்கூறிவந்தது ஆகஸ்ட்டு பதினைந்தோடு முடிந்துவிட்டது. இனி நல்லாட்சிக்கு ஏற்ற வழி கண்டுபிடித்தாக வேண்டும். இந்தப் பொறுப்பு, இனி ஆட்சியாளர்களின் தூக்கத்தையும் கெடுக்கும்! புதுநிலைமை ஏற்பட்டுவிட்டது, என்றால் புதிய பொறுப்பு வந்துவிட்டது என்றே பொருள். நெரித்த புருவம் இனிக்கூடாது! உரத்த குரல் பயன்படாது! உலகிலே பெரிய ஏகாதிபத்யம், விலகிய திருநாளைக் கொண்டாடின பிறகு, உள்நாட்டிலே உள்ள ஒரு ஏகாதிபத்யம், தன் பிடியிலே நம்பிக்கை கொள்வது அழகுமல்ல, அறிவுடைமையுமாகாது. இந்திய துணைக்கண்டம், இரு அரசுகள் ஆயின! எதிர்ப்பாளர்கள், கூட்டுத் தோழர்கள் ஆயினர்—பிரிந்த பிறகு! அதுபோன்றே திராவிடம் பிரிக்கப்பட்டுத் தனி அரசு ஆகித் தீரவேண்டும். இந்த வேலையை, வடநாடு எப்படிச் செய்யப்போகிறது? பிரிட்டிஷ் ஏகாதிபத்யத்தைப் போல, யூகத்துடன் நடந்துகொள்ளுமா? அல்லது, டச்சு, பிரன்சு, போர்ச்சுகீசிய, ஏகாதிபத்யங்கள் போல, அட்டகாச முறையா என்பதைக் காணும் நாட்கள், விரைந்து வருகின்றன. திராவிடர் அதற்குத் தயாராக வேண்டும். இன்று காங்கிரஸ்ஊழியர்கள், பெற்றுள்ள ஜனநாயக உணர்ச்

(9ம் பக்கம் பார்க்க)

# கிடைத்திருப்பது என்ன?

[நெடுஞ்செழியன்]

**கிடைத்தது என்ன?** இந்தக்கேள்வி இன்றுஎல்லோர் மனதையும் குடைகிறது.

உண்மையான சுதந்திரமா? வெறும்பிரமையா? குடி ஏற்ற நாட்டு அந்தஸ்தா? உண்மைச் சுயாட்சியா? வெள்ளையரின் பிடி அடியோடு நீங்கிவிட்ட நிலையா? அல்லது புதிய பிரிட்டிஷ் பொன் விலங்கா? சிரிக்கும் சர்ச்சிலா? அல்லது உண்மையாகவே உரிமையா? கிடைத்தது என்ன? கேட்டது கிடைத்ததா? என்று சகலரும் தங்களைத்தாங்களே கேட்டுக்கொள்கின்றனர்.

திராவிடர் கழகத்தாராகிய நாம், திராவிடநாடுதனிநாடு ஆகவேண்டும் என்று கேட்டோம். அது கிடைக்கவில்லை. கிடைக்குமென்று நாம் நம்பக்கூடியசூழ்நிலைகூட உண்டாகவில்லை. அந்தச் சூழ்நிலை, நம்பிக்கை, பிறகு இலட்சிய வெற்றி, இவ்வளவும் இனிநமது வேலையையும், நமக்கும் உண்மைவிடுதலை விரும்பிகளுக்கும்ஏற்படும் கூட்டுறவைப்பொறுத்தும்இருக்கிறது. ஆகவே நம்மைப்பொறுத்தமட்டிலே, நாம், கிடைத்தது என்ன,என்பதிலே மனக்குழப்பம் கொள்ளவேண்டிய அவசியத்தில் இல்லை.

ஆனல், பொதுவாக இந்தியாவுக்குக் கிடைத்தது என்ன? என்பதுபற்றி, நம்மில் பலரும், மற்றக்கட்சியினரும்கூட, சந்தேகம் அடைகின்றனர். அப்படி ஒன்றும் பிரமாதமான புதியநிலை ஒன்றும் எற்பட்டுவிடவில்லை, இன்னமும் வெள்ளையரின் முன்னேடும் பிள்ளையாகத்தான் நாடு இருக்கிறது, கிடைத்திருப்பது குடி ஏற்ற நாட்டு அந்தஸ்துத்தான், என்று பேசப்படுகிறது.

பிரிட்டிஷ், வேலைமுறையே, அலாதியானது. அவர்களின் செயலுக்கும்சொல்லுக்கும் எப்படி, 'பத்தினித்தனம்' இராதோ, அதேபோலத்தான், அவர்களிடம்உள்ள முறைகளுக்கும், அந்த முறைகளுக்கு அவர்கள் குறித்துள்ள பெயருக்கும், பொருத்தம் இராது. அதுபற்றி அவர்கள் கவலைப்படுபவர்களுமல்ல.

இன்று அங்கு ஒருராஜா இருக்கிறர்! ஆனல் வீடு பழுதுபார்க்கக்கூட, பார்லிமெண்டால் நியமிக்கப்பட்டுள்ள மந்திரியிடம் மனுப் போடுகிறர் மன்னர். முடி அவருக்கு! ஆனல் நாட்டின்பிடி, மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் மந்திரிகளிடம்! இந்தநிலைமையில், அவர்களின் அரசியல் திட்டத்திலேயோ, பிரிட்டன், மன்னர்பிரான் ஆட்சியிலுள்ளநாடு, என்று தான் குறிக்கப்பட்டிருக்கும்.

முடிஅரசு—பெயரளவில்-நடை முறையிலேயோ, குடிஅரசு. ஆனல் குடிஅரசு என்று கூறமாட்டார்கள்.

டொமினியன் ஸ்டேடஸ்—குடியேற்ற நாட்டு அந்தஸ்த்து என்ற சொற்றொடரும், இதுபோலவே, பெயரளவில் ஒருவிதமாகவும், நடைமுறையில் வேறுகவும் இருந்திடுவதை, பிரிட்டிஷ் சாம்ராஜ்ய சரித நுட்பங்களைக்கொண்டு உணரலாம்.

நண்பர் நெடுஞ்செழியன், அந்தச், சுவையுள்ள, ஆனல் சிரமமான, ஆராய்ச்சியை இக்கட்டுரை மூலம்' வெளியிடுகிறர். கிடைத்தது என்ன? என்பது, அவருடைய அரிய கட்டுரையைப் படித்துச் சிந்தித்தால்' நன்கு விளங்கும் என்று நம்புகிறேம்.

ஆகஸ்ட் 15ம் நாளிலிருந்து இந்தியாவும் பாகிஸ்தானும் சுயேச்சை பெற்ற டொமினியன்சர்க்கார்களாக (Indepndent Dominion Governments) மாறி, பிரிட்டனேடு தொடர்புடைய நாடுகளின் பொதுநல அமைப்பில் (British Commowealth of nations) அங்கம்பெற்றுள்ளன. இந்தியாவும், பாகிஸ்தானும் உலக அரசியல் அரங்கில் எந்த இடம் பெறுகின்றன என்பதைஅறிய வேண்டியது அவசியமாகின்றது. (Colonial states) என்பதற்குக் குடியேற்ற நாட்டு அந்தஸ்து என்ற பொருளைக்கொள்ளவேண்டுமாயின் (Dominion status) என்பதற்கு காப்புடைய நாட்டு அந்தஸ்து என்ற பொருளைக்கொள்வது பொருந்தும். இந்தியாவும், பாகிஸ்தானும் தற்பொழுது காப்புடைய நாட்டு அந்தஸ்தைப் (Dominion status) பெற்றுள்ளனவாகக் கூறப்படுகின்றது. காப்புடையநாட்டு அந்தஸ்து என்பது எப்படி இருந்து, எப்படி வளர்ந்து, எப்படி வந்திருக்கிறது என்பதை ஆராய்வோம்.

1922ம் ஆண்டு சுயேச்சை அயர்லாந்தின் அரசியல்அமைப்பு,பிரிட்டனேடு தொடர்புடைய மற்ற குடியேற்ற நாடுகளின் அந்தஸ்தின் அளவிற்கு உயர்த்தப்பட்ட பொழுது தான், முதன் முதலில் காப்புடைய நாட்டுஅந்தஸ்து(Dominionstatus) என்ற சொற்றொடர் வழக்காற்றில் பட்டும் படாததுமாக உலவ ஆரம்பித்தது. தற்பொழுதுஇந்தஅந்தஸ்து பிரிட்டிஷ் பாராளும் மன்றத்தினரால் எல்லாக் குடியேற்ற நாடுகளின் சம்மதத்தால் சட்டமாக்கப்பட்ட 1913ம் ஆண்டு வெஸ்ட் மினிஸ்டர் முறையில் Statute of westminister) சட்டமாக ஏற்பட்டுள்ளது. பிரிட்டிஷ் அரசோடு பொதுவான நட்புரிமை கொள்ளுமளவுக்குக்காப்புடைய நாடுகள் (Dominions) எல்லாம், மேற்கண்ட சட்டத்தின்படி, பிரிட்டனேடு தொடர்புடைய நாடுகளின் பொதுநல அமைப்பின் (British Commonwealth of nations) கீழ் கொண்டு வரப்பட்டன. காப்புடைய நாடுகள் எல்லாம் உள்நாட்டு வெளிநாட்டு விவகாரங்களில் தனி உரிமை பெற்றன. காப்புடைய நாடுகளின் (Dominions) தன்னுட்சி உரிமைபெருகப்பெருகக்காப்புடைய நாட்டு அந்தஸ்துஎன்ற சொற்றொடரின்பொருளும் அவ்வப்போதுமாறிக்கொண்டே வந்திருக்கிறது. காப்புடைய நாட்டு அந்தஸ்து என்பது

(10-ம் பக்கம் பார்க்க)

# திராவிட நாடு

காஞ்சி] 24—8—47 [ஞாயிறு

## அரி(சி)ச் சுவடி

★

அன்னிய ஆட்சியின் விளைவு உணவுப் பஞ்சம்.

ஆங்கில ஏகாதிபத்தியத்துக்கு இது விஷயமாக அக்கரை ஏற்படுமென்று நம்புவதற்கில்லை.

இந்தியாவிலே, பட்டினிப்பட்டாளம் பெருகி வருகிறது.

ஈரமற்ற நெஞ்சுடன் இருக்கிறது அரசாங்கம்.

உணவுப் பஞ்சம் உறுமுகிறது.

ஊர்மக்கள் குமுறுகிறார்கள்.

எங்கும், வங்கம், தாண்டவமாடுமோ என்று பயப்படுகிறார்கள்.

ஏகாதிபத்யத்தால், இந்த நெருக்கடியைச் சமாளிக்க முடியாது.

ஐக்கிய முன்னணி ஏற்படுத்தியாவது ஆட்சி முறையை மாற்றியாக வேண்டும்.

ஒழியவேண்டும் பஞ்சத்தை உண்டாக்கிய பரங்கி சர்க்கார்.

ஓராயிரம் திட்டம் போட்டும், பலன் ஏற்படாது—ஆட்சி முறை மாறு முன்னம்.

ஔவை சொன்ன, 'ஆறுவது சினம்' என்ற வாக்கும் இனிக் காற்றில் பறக்கும்—புரட்சி வலுக்கும்—

அஃதறியும் ஆற்றல் ஆங்கில ஏகாதிபத்யத்துக்கு ஏது?

நாட்டுமக்களுக்குஇந்தக்காங்கிரஸ் அரிச்சுவடி கவனமிருக்கும் என்று நம்புகிறோம். ஆளவந்தார்களாக அவர்கள் ஆவதற்கு முன்பு, நாடெங்கும் காங்கிரஸ் தலைவர்கள், நடத்திய பிரசாரத்தின் தொகுப்பு அந்த அரிச்சுவடி!

உணவுப் பொருள் நெருக்கடிக்குக் காரணமாகக் கூறப்பட்டு வந்தவைகளில் முக்கியமானவை யாவை? ஒன்று,பொதுமக்களிடம்தொடர்போ அக்கரையோ கொள்ள முடியாத சர்க்கார் இருக்கிறது, ஆகவே தான் நாட்டுக்குத் தேவையான காரியம் நடைபெறவில்லை, என்று பலமாகப் பேசப்பட்டது.

இன்று பொதுமக்களின் ஆட்சி நடக்கிறது—ஏன் போகவில்லை உணவுப் பஞ்சம்? போகாதது மட்டுமல்லவே! நெருக்கடி முற்றுகிறதே! என்ன ஆகுமோ என்று நினைத்துப் பார்த்தாலே நடுக்கமெடுக்கிறது. இரண்டாண்டுகளுக்குமேலாக, காங்கிரஸ்ஆட்சி நடக்கிறது-ஏன் நிலைமை சீர்படவில்லை?

உணவுப் பஞ்சத்தை ஒழிக்க, என்ன வழி என்று மந்திரிமாரைக் கேட்டாலும்,

1. வெளி நாடுகளிலிருந்து வரவழைப்பது.
2. இங்கு உற்பத்தியைப் பெருக்குவது.
3. உணவுப் பொருள் கள்ள மார்க்கட் போகாதபடி பார்த்துக் கொள்வது.

என்று கூறுவரே.

இந்த அவசியமான காரியத்தை அன்னிய ஆட்சி செய்யவில்லை — அதை மக்களுக்கு எடுத்துச்சொல்லி, ஆட்சிக்கு வந்த நம்மவர்கள் செய்ததென்ன?

'நம்மவர்கள்' ஆளவந்தார்கள் என்ற உடனே, பசி அடங்கிவிடுமா! பாழும், வயிற்றுக்குத் தெரிவதில்லையே, பாராளவந்துள்ளவர்கள், பரங்கியரை விரட்டிய நம்மவர்கள் என்று!!

என்ன செய்தனர் இந்த மூன்று காரியங்களில்?

வெளிநாட்டுப் பொருளை வரவழைப்பது எந்த அளவு வெற்றி பெற்றது?

உற்பத்தியைப் பெருக்க, என்ன முறைகள் கையாளப்பட்டன! எவ்வளவு வெற்றி கிடைத்தது?

கள்ளமார்க்கட்டுக்காரர்கள் ஒழிக்கப்பட்டனரா? கதராடை போர்த்துக் கொண்டல்லவா அவர்கள் கெம்பீரமாக உலவுகிறார்கள்!

இவ்வளவும் போதாதென்று, டில்லி சர்க்காருக்குத் தபால் போடுவதும் தூது அனுப்புவதும், காவடி தூக்குவதுமாகச்சென்னைசர்க்காரின் நிலைமை இருக்க இருக்க, டில்லியோ நான் அதிகம் செய்வதற்கில்லை. என்று கூறுகிறது, காந்தியாரோ, தென்னிந்தியர்கள் மிக மிக நல்லவர்கள், புல்பூண்டு தின்றுகூட வாழக் கூடியவர்கள் என்று கூறிவிடுகிறார். புராணீகர்களோ, திருவிளையாடற் புராணத்திலே குண்டோதரனுக்குச் சோறிட்ட படலத்தைப் படித்துக் காட்டுகிறார்களே தவிர, வடித்துக் கொட்டக் காணோம், இந்த நிலையில், யார்தான் உதவி? என்னதான் மார்க்கம்? திகைக்கிறார்கள் மக்கள்—சர்க்காரின் திடீர் அறிக்கைகள் திகைப்பை அதிகரிக்கச் செய்கிறது. நிலைமை தெளிவு தருவதாக இல்லை.

தஞ்சை வட்டாரத்திலும், வேறு பல வட்டாரங்களிலும், மிராசுதார்—உழவர் போராட்டம் நடந்தபோது, அதன் பலனாக, உற்பத்தி பாதிக்கப்படுமே என்ற கவலை கொண்டு, பிரச்னையை நியாயமான முறையிலே தீர்த்துவைப்பதற்குப் பதிலாக, இந்தச் சமயத்தை, கம்யூனிஸ்டுக் கட்சியை ஒழிக்க உபயோகப்படுத்திக் கொள்வோம், என்ற எண்ணமே கொண்டனர் காங்கிரஸ் சூத்ரதாரிகள். அதன் பலன் என்ன? சென்னை, வங்கமாகுமோ, என்ற பயமும் சந்தேகமும், சர்க்கார் வட்டாரத்திலேயே உலவத் தொடங்கி விட்டது. இதிலே, வேறோர் வேதனை தரும் நிலைமை என்னவெனில், உணவு நெருக்கடி இவ்வளவு மோசமாக இருந்தபோதும், பொதுமக்கள் [illegible] இல்லை. எல்லாம் சரியாகவே நடைபெற்று வருகிறது, நமது சர்க்கார் நடைபெறும்போது, நமக்கென்ன குறை என்று மக்கள், மனப்பூர்வமாக நம்பிக்கொண்டுள்ளனர். அந்த அளவு நம்பிக்கை அவர்களுக்கு ஏற்படும்படி, காங்கிரஸாரே, முன்னாளில் செய்தனர்—பொதுமக்களின் சர்க்கார் ஏற்பட்டாலொழிய, இந்தப் பயங்கர உணவு நெருக்கடி ஒழியாது—திறமையான நிர்வாகம்—மக்களிடம் நெருங்கிய தொடர்பு—வற்றாத அக்கரை, இவ்வளவும் கொண்டு, வேலை செய்யக்கூடிய யோக்யதை பொதுமக்களின் ஆட்சிக்கே உண்டு, எனவே அவர்கள் ஆளவந்தாலொழிய, உணவுப் பஞ்சம் நீங்காது, என்று, ஊரூரும் சென்று பேசினர்—ஓய்வு ஒழிச்சலின்றி எழுதினர். எனவே மக்கள், இப்போது 'நம்மவர்' ஆள்கிறார்கள், ஆகவே நமக்குச் சோற்றுக் கவலையாவது இனி, என்று நம்புகின்றனர். [illegible] அந்த நம்பிக்கையைத் தாக்குகிறது. வழக்கமான உணவு கிடைக்காமல், கிடைத்ததை மென்று தின்றுவிட்டு, அடிவயிற்றைத் தடவிக்கொடுத்து, என்னமோ செய்கிறதே - ஏதோ ஒருவகை வலி—என்று பேசும் மக்கள் என்ன எண்ணுவார்கள் — நெருக்கடி முற்றுகிறது என்ற உண்மையை உணர்ந்

தால். திடீர்த் தாக்குதலாக இருக்கும். உடனடியாக, சென்னை சர்க்கார், இந்தக் காரியத்தைக் கவனித்தாக வேண்டும். டில்லியின் போக்கு, இந்தச் சமயத்தில் எப்படி இருக்கும் என்பது, தெளிவாக்கப்பட வேண்டும்.

திராவிடர் கழகம், இந்த உணவுப் பொருள் நெருக்கடியைத் தீர்த்து வைக்க, வேறு கட்சிகளில் உள்ளவர்களானாலும், இந்த விஷயத்திலே தக்க திட்டம் தீட்டுவரானால், அவர்களுடன் கலந்து வேலை செய்ய வேண்டும். சென்னையால், பஞ்சத்தைத் தாங்க முடியாது.

சுதந்திரமோ வந்தது
சோற்றுப் பஞ்சமே தந்தது

என்று நாடு, பாடி அழவேண்டிய நிலைமை வரக்கூடாது. அந்த நிலை, ஒரு மந்திரி சபைக்கு மட்டுமல்ல, அதைச் சிருஷ்டித்த கட்சிக்கு மட்டுமலல, நாட்டுக்கே, கேடாக முடியும். எனவே, எங்கெங்கு என்னென்ன வகையான உணவு கிடைக்க முடியுமோ அவைகளை எல்லாம் வரவழைத்துச் சேகரித்தாக வேண்டும். செத்தாலும் சரி, அமெரிக்காவிலிருந்து வரும் 'டப்பா உணவை'த் தின்னமாட்டோம் என்று மக்கள் கூறுகிறார்கள், என்று, பிரதமர் கூறுகிறார். மக்கள் அவ்விதம் கூறுவர்-அவர்களுக்கு, விளக்கம்கூறவோ புதிய உணவின் மேன்மையைப் பிரசாரம் செய்யவோ நேரமுமில்லை. ஆனால், அந்த உணவுப்பொருளையும் இழந்து விட்டு, வங்கமாகக்கூடாது நெருக்கடி முற்றும் போது, இன்று மறுத்துக் கூறும் மக்கள்கூட, 'அதையாவது கொடு' என்று கேட்பர்—பசி, கேட்கச் செய்யும். "நீ முன்பு வேண்டாம் என்று கூறிவிட்டாயே—அதனால் நான் அந்தப் பொருளை வாங்கிவைக்கவில்லையே" என்று அப்போது கூறுவது, பைத்யக்காரத்தனமாக முடியும். கூச்சப்பட்டுக்கொண்டோ, குட்டு வெளியாகுமோஎன்று பயந்துகொண்டோ, டில்லி சர்க்கார் சென்னை உணவு நெருக்கடி சம்பந்தமாக என்ன போக்கு கொண்டுள்ளனர், அக்கரை இருக்கிறதா, அல்லது அலட்சியமாக இருக்கிறதா என்ற உண்மையைப் பொதுமக்களுக்கு எடுத்துக் கூற ஓமாந்தூரார் தயங்கக் கூடாது!

வடநாட்டிலே, ஏராளமானஉணவுப் பொருள் கள்ளமார்க்கட்டிலே குவிந்து கிடக்கிறது—என்று காங்கிரஸ் தலைவர்களே கூறியுள்ளனர்.

ஏன், டில்லி சர்க்கார் அந்தப் பொருளைக் கண்டறிந்து பட்டினிப் படுகுழியின் பக்கம் தூரத்தப்படும் சென்னைக்கு அனுப்பக் கூடாது.? இந்த நெருக்கடியான நேரத்தில், மத்ய சர்க்கார், அக்கரையற்றுப் போகுமானால், குற்றம் அதன் மீது மட்டுமல்ல, எக்காரணம் பற்றியோ, அதற்கு உடந்தையாகி, உண்மையை மறைத்த குற்றம், சென்னைக் காங்கிரஸ் மந்திரி சபையையும் சாரும்.

குன்றுபோல் அன்னம் குவித்திருக்குதென் எதிரில் உண்ணப் போனாலோ ஊராள்வோன் கூர்வாள் வந்து மறிக்குதடி!

என்று வேறோர் பொருள் பற்றி புரட்சிக் கவிஞர் கூறினார் ஓமாந்தூரார் காணும் காட்சி, இந்தக் கவிதையை நினைவூட்டுவதாகக் கூறப்படுகிறது. டில்லி சர்க்காரின், இலட்சணமும், அதனுடன் நெருங்கிய 'பந்தத்துவம்' கொள்ளவேண்டும் என்று பேசுபவர்களின் நிலையும், இப்போது விளங்க இருக்கிறது. ஆனால் இது விஷப் பரீட்சை. இதன் முடிவு, டில்லி—சென்னை மனத்தாங்கல் என்ற அளவோடு முடியாதே, சென்னையில் வங்கம், என்ற அளவு போகக்கூடும், எனவேதான் குற்றம் எங்கு என்பதையே முதல் நோக்கமாகக் கொள்ளாமல், எப்படிஇந்த நெருக்கடியைத் தவிர்ப்பது, என்பதற்கான திட்டத்தை, தலைவர்கள் தயாரிக்க வேண்டும் என்று வற்புறுத்திக் கூறுகிறோம்.

1. உற்பத்தி பெருக்குத்திட்டம்.
2. கள்ளமார்க்கட் ஒழியத் திட்டம்.
3. இருக்கும் உணவு எல்லோருக்கும் நியாயமாகக் கிடைக்கும் ஏற்பாடு.

இவை உடனடியாகத் தயாரிக்கப் பட்டு, வேலை துவக்கப்படவேண்டும்—பிணங்களை எண்ணும் வேலை வங்கத்தில் ஏற்பட்டது—கவனத்திலிருக்கட்டும்.

✶

**மாநில பிரிவினை மாநாடு**
**14—9—47-ல் கடலூரில்**
**நடைபெறும்**

6-ம் பக்கத் தொடர்ச்சி

சியை நாம் வரவேற்பதற்குக் காரணம்—அவர்கள், இந்தப் பிரச்னையை உணருவதற்கு ஜனநாயக உணர்ச்சி தான் ஆரம்பக் கட்டமாக அமையும் என்பதால். அவர்கள், எங்ஙனம் பிரிட்டிஷ் ஏகாதிபத்யத்தை எதிர்த்துப் போராடினரோ, அதுபோலவே தங்கள் தாய்நாடாம் திராவிடத்தை வடநாட்டு ஏகாதிபத்யம், சுரண்டி, அடிமைப் படுத்துவதைப் புரிந்து கொள்ளுவார்களே யானால், அதனையும், நிச்சயமாக எதிர்த்துப் போரிடுவர். இதனை உணருவதற்கு அவர்கள், காங்கிரசுக்குள் இருந்தாலும், புகுத்தப்பட்ட கொள்கைகள், திணிக்கப்படும் திட்டங்கள் ஆகியவைகளை, நம்பியே தீரவேண்டும் என்ற நிலையிலிருந்து விடுபட்டு, சென்னை காங்கிரஸ் ஊழியர், மாநாட்டிலே, சீரிய முறையிலே அவர்கள் வேறுபல விஷயங்களைச் சிந்தித்தது போல, இந்தப் பிரிவினை விஷயத்தையும் சிந்திக்க வேண்டும். அந்த மனநிலை, ஜனநாயக உணர்ச்சி அவர்களுக்கு வந்திருப்பது கண்டே, நாம் மகிழ்கிறோம், நம்பிக்கை கொள்கிறோம் திராவிடத்தின் விடுதலைப் போருக்குப் புதிய பலம் பிறக்குமென்று.

✲

### காணவில்லை

சின்னக் காஞ்சிவரம் வடவண்டைமாட வீதி 63-ம் நம்பர் வீட்டிலிருந்த R. வசந்தா என்ற சுமார் 14 வயதும் சிகப்பு நிறமுமுள்ள எட்டாவது வகுப்பு வரை படித்த பெண் 8-8-47 ல் இருந்து காணாமல் போய்விட்டது, கண்டுபிடிப்பவர்கள் P. M. கோமளம்மாள் 63, வடவண்டைமாட வீதி, சின்ன காஞ்சிவரம் என்ற விலாசத்துக்குத் தெரியப் படுத்தவும்.

"ஸ்பார்க்"
(ஆங்கில வாரப் பத்திரிகை)
ஆசிரியர்
எஸ். வேதரத்னம்.
ஆண்டு சந்தா, ரூபாய் ஆறு.
ஏஜென்சி விபரங்கட்குபின்கண்ட விலாசத்திற்கெழுதவும்.
மானேஜர்,
"ஸ்பார்க்"
15. தம்புச்செட்டித் தெரு.
சென்னை.

7-ம் பக்கத் தொடர்ச்சி

ஒரு நிலைத்த அரசியல் கோட்பாட்டை உணர்த்திவந்ததாகத் தெரியவில்லை.

முதலில் காப்புடைய நாடுகள் (Dominions) எல்லாம், உள்நாட்டு வெளிநாட்டு விவகாரங்களில் ஏகாதிபத்ய அரசாங்கத்திற்கு முழுவதும் கட்டுப்பட்டுக் குடியேற்ற நாட்டு அந்தஸ்தைக் கொண்ட நாடுகளாகவே விளங்கின.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் குடியேற்ற நாடுகள் கிளர்ச்சி செய்து சிறிது சிறிதாக உள்நாட்டு விவகாரங்களில் தன்னாட்சி உரிமைபெற்றன. தன்னாட்சி உரிமை வளரவும், மற்றநாடுகளுடன் போக்கு வரத்துத்தொடர்புமிகவும், மக்கள் செல்வ நிலையும் அரசியல் அறிவும் பெருகவும் வெளிநாட்டு விவகாரங்களிலும் நேரே தொடர்பு கொள்ள, குடியேற்ற நாடுகள் எல்லாம் இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் முயற்சி செய்தன. முதலில் வெளிநாடுகளோடு வர்த்தக ஒப்பந்தங்களைச் செய்துகொள்ளும் உரிமை கொடுக்கப்பட்டது. வெளிநாட்டு விவகாரங்களில் தனி உரிமை வேண்டும் என்ற எண்ணம், ஏகாதிபத்யத்தில் அடங்கிய நாடுகளின் மாநாடுகள் பலவற்றைக்கூடச் செய்தது. இந்த முயற்சி 1914ம் ஆண்டில் ஓரளவுக்கு வெற்றி தந்தது. 1914ம் ஆண்டில் அமைக்கப்பட்ட போர் நிர்வாகக்குழுவில் உறுப்பினர்களாக, ஐந்து பிரிட்டிஷ் மந்திரிகளும், காப்புடைய நாடு முதலமைச்சர்களும், இந்தியாவின் பிரதிநிதி ஒருவரும் இடம் பெற்றனர். இக்குழுவிற்குப் பிரிட்டிஷ் பிரதமரே தலைமை தாங்கினார். தன் பாதுகாப்பில் இருந்த மற்ற நாடுகளின் யோசனையைக் கேட்டு அதன்படி நடக்கப்பிரிட்டிஷ் அரசாங்கம் முதல் தடவையாக முன்வந்தது. போர் முடிந்ததும் நடைபெற்ற சமாதான மாநாட்டில் தனிப்பட்ட உரிமையுடைய உறுப்பினர்களாகக் காப்புடைய நாடுகள் (Dominions) இடம்பெற்றன. சமாதான ஒப்பந்தத்தில் தனித்தனியே கையெழுத்திட்டன. சர்வதேச சபையில் (League of Nations) அங்கம் பெற்றன. இதிலிருந்து கனடாவும், அயர்லாந்தும் வேற்று நாட்டிற்குத் தூதுவர்களை அனுப்பவும், வேற்றுநாட்டுத் தூதுவர்களை ஏற்றுக்கொள்ளவும் முற்பட்டன.

காப்புடைய நாடுகள் தத்தம் நாட்டிற்கேற்ற முறையில் செயல் தொடங்க எந்தத் தடையும் குறுக்கே இருப்பதை விரும்பவில்லை. அயர்லாந்து தன் அரசுரிமைக்குக் குறுக்கே நிற்கும் தடைகளெல்லாம் நீங்கிய முழு விடுதலையை விரும்பிற்று. கனடா, பிரிட்டிஷ் கவர்னர் ஜெனரலின் அதிகாரங்களுக்குத் திரை போடும் புதியதொரு அந்தஸ்து வேண்டுமென்று கேட்டது. தென் ஆப்பிரிக்கா யூனியனின் பிரதமரும், தேசியக் கட்சியின் தலைவருமான ஜெனரல்ஹெர்ட்ஜாக் (General Hertzog) காப்புடைய நாடுகளுக்குத தகுந்த அந்தஸ்தை லண்டன் கொடுக்காத வரையில் எந்த அன்னிய நாடும் காப்புடைய நாடுகளை ஏற்றுக்கொள்ளக் கூடாது என்று வற்புறுத்தினர். இவற்றின் பலனாக 1926ம் ஆண்டு ஏகாதிபத்திய மாநாடு ஒன்றுகூடிக் காப்புடைய நாடுகளின் அந்தஸ்தைத் தீர்மானிக்க முயன்றது. பிரிட்டனுக்கும் காப்புடைய நாடுகளுக்கும் (Dominions) உள்ள தொடர்பைக் கீழ்க்கண்டவாறு அம்மாநாடு முடிவு செய்தது. "அந்த நாடுகள் பிரிட்டிஷ் மகுடத்திடத்துப் பொதுவான நட்புரிமைத் தொடர்பு கொண்டிருந்தாலும், அவைகள் பிரிட்டிஷ்பேரரசில் முழு சுயேச்சை பெற்ற நாடுகளாகவும், சம அந்தஸ்து உடையவைகளாகவும், உள்நாட்டு வெளிநாட்டு விவகாரங்களில் ஒன்றுக்கொன்று எவ்வகையிலும் அடிமைப்படாதவைகளாகவும் இருக்கும். பிரிட்டனோடு தொடர்புடைய நாடுகளின் பொதுநல அமைப்பின் (British Commonwealth of Nations) உறுப்பினர்களாகச் சுயேச்சைப் பங்குகொள்ளும்" என்பதாகும். அப்பொழுது வெளியான அறிக்கை வெளியிட்டதாவது "சுயேச்சை ஸ்தாபனங்கள் எல்லாம் அதனின் உயிர் நாடி ஆகும். சுயேச்சை ஒத்துழைப்பு அதனின் கருவியாகும்" (Free institutions are itslife blood; free co-operations is its instrument) என்பதாகும். 1929ம் ஆண்டு கூடிய கமிட்டியொன்று சிபார்சு செய்த நோக்கங்களை 1930ம் ஆண்டு கூடிய ஏகாதிபத்திய மாநாடு ஒப்புக்கொள்ள, அதையும், 1926ம் ஆண்டு செய்த முடிவையும் ஒப்பிட்டு 1931ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 11ம் நாள் காப்புடைய நாட்டு அந்தஸ்து வெஸ்ட் மினிஸ்டர் முறைமையில் சட்டமாக ஏற்கப்பட்டது பாராளும் மன்றத்தால். காப்புடைய நாடுகளின் மீது அதுவரையில் இருந்த ஏகாதிபத்திய கட்டுப்பாடுகளெல்லாம் இந்தச் சட்டத்தால் நீங்கப்பெற்றன.

இவ்வகையால் காப்புடைய நாடுகள் (Dominions) உள்நாட்டு, வெளிநாடு நிலையில் முழுத் தனியுரிமை பெற்ற அரசுகளாகின்றன. அறுபடாமலிருக்கும் ஒரே ஒரு முடி பிரிட்டிஷ் மகுடத்தோடு நட்புரிமையில் கொண்டிருக்கும் தொடர்பு தான் வெஸ்ட் மினிஸ்டர் முறைமைப்படி காப்புடைய நாடுகள் விரும்பினால் பிரிட்டிஷ் பொதுநல அமைப்பிலிருந்து விலகிக்கொள்ள முடியும். இதனால் காப்புடைய நாடுகள் பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு அடிமையுடையன என்பது பெறப்படாது; பொருந்தாது; நட்புரிமை குறித்து ஒரே ஒரு வகையில் தொடர்புடையனவேயன்றி, அடிமைப்பட்டன அல்ல.

பிரிட்டிஷ் பொதுநல அமைப்பில் ஆகஸ்ட் 15-ம் நாளுக்கு முன்வரையில் தொடர்பு கொண்ட நாடுகள் கனடா, ஆஸ்திரேலியா, நியூஜிலந்து, தென் ஆப்ரிக்கா, அயர்லாந்து, நியூபௌண்ட்லாண்டு என்பனவாகும். ஆகஸ்ட் பதினைந்தாம் நாளிலிருந்து புதிய இரண்டு காப்புடைய நாடுகளான இந்தியாவும், பாகிஸ்தானும் பிரிட்டிஷ் பொதுநல அமைப்பில் அங்கம் வகிக்கின்றன. அங்கம் வகிக்கின்றன என்றால் அடிமைப்பட்ட முறையில் அல்ல, பிரிட்டிஷ் மகுடத்தோடு நட்புரிமை கொண்டிருக்கிற முறையினால்.

ஆகஸ்ட் பதினைந்தாம் நாள் இந்தியாவிற்கும், பாகிஸ்தானிற்கும் சுதந்திரநாளாக அமைவதற்குக் காரணம், அந்நாளில் இவ்விரு பகுதிகளும் உள்நாட்டு வெளிநாட்டு விவகாரங்களிலெல்லாம் சுயேச்சையடைந்து, தங்களுக்கென்ற அரசியல் முறை வகுக்குங்காலம் வரையிலும் பிரிட்டிஷ் பொதுநல அமைப்பில் (British Commonwealth) அங்கம் பெறுகின்றன என்பதேயாகும். தமக்கென்று தேர்ந்த அரசியல் அமைப்பு அமைக்கப்பட்டபின், பிரிட்டிஷ் பொதுநல அமைப்பில் அங்கம் வகிப்பதா, இல்லையா என்

பதை இந்தியாவும், பாகிஸ்தானமும் முடிவு செய்யும்.

பிரிட்டிஷ் பொதுநல அமைப்பைப் பொதுவாக ஒருகழகம் (club) என்றும், அதில் பிரிட்டனும், பிரிட்டனோடு தொடர்புடைய காப்புடைய நாடுகளும் சரிசமத்துவமான உறுப்புகளாக அமைகின்றன என்றும் கூறுவர். உறுப்புகளுக்குள்ளாக சமத்துவ மனப்பான்மை கொள்ளப்படுகின்றதே யல்லாமல், ஒன்றிற்கொன்று உயர்வு தாழ்வு முறை கொள்ளப்படுவதில்லை. இந்தியாவும், பாகிஸ்தானும் காப்புடைய நாட்டு அந்தஸ்து (Dominion status) உடைய நாடுகளாக அமைவது, புதிய அரசியலமைப்பு முறை ஏற்படும் வரையிலும் உள்ள இடைக்கால ஏற்பாடேயாகும். புதிய அரசியலமைப்புகள் பிரிட்டிஷ் பொதுநல அமைப்பிலிருந்து விலக முடிவு செய்து விட்டால், காப்புடைய நாட்டு அந்தஸ்து அன்றிருந்து மறைந்து தன்னரசு தனியுரிமை நாடுகளாகமிளிரும். காப்புடைய நாடுகளின் கூட்டு யோசனையின்படி நடக்க பொதுநல அமைப்பு Commonwealth) இருக்கிறதே யொழிய, பொதுநல அமைப்பு, பிரிட்டன் இடும் கட்டளையைக் காப்புடைய நாடுகளின் மேல் திணிக்க அல்ல.

பிரிட்டிஷ் பொதுநல அமைப்பில் ஒரு உறுப்பாக அமைந்த அயர்லாந்து, தன் விருப்பப்படியே செயலாற்றி வரும் தன்மையோடு விளங்கி வருகிறது. சென்ற உலகப்போரில் பிரிட்டனுக்குக் கூட உதவிசெய்ய முன் வராமல் நடுவுநிலை வகித்தது. டிவாலராவின் தலைமையின் கீழ் இருக்கும் அயர்லாந்து விசுவாசப் பிரமாணம் எடுப்பதையும், பிரிவிக் கவுன்சிலுக்கு முறையீடு செய்தலையும் ஒழித்துவிட்டது. என்றாலும் பிரிட்டிஷ் பொதுநல அமைப்பில் ஒரு உறுப்பாகவே விளங்குகின்றது. இதைப்போல இந்தியாவும், பாகிஸ்தானும் உலக அரசியல் அரங்கில் உலவ முடியும். இந்த நிலை சுதந்திரம் பெற்ற நிலையையே குறிக்கும்.

இந்தியாவும், பாகிஸ்தானும் விடுதலை பெறுகின்றன என்ற தன்மையைக் குறிக்கவே, பிரிட்டிஷ் பாராளும் மன்றத்தில்நிறைவேற்றப்பட்ட மசோதா 'இந்திய சுதந்திர மசோதா' (Indian Independence Bill) என்ற பெயரில் பிரதமர் அட்லியால் கொண்டு வரப்பட்டது. மேலும் இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் கொடுக்கப்பட்டுள்ள சுதந்தரம், வெஸ்ட்மினிஸ்டர் முறைமையின் (Statute of Westminister) படிக் கொடுக்கப்படாமல் தனிப்பட்ட முறையில் 'இந்திய சுதந்திர மசோதா' என்ற மசோதாவைப் பாராளும் மன்றத்தில் நிறைவேற்றிய பிறகு கொடுக்கப்பட்டதால், மற்றக்காப்புடைய நாடுகளைக் காட்டிலும் இந்தியாவும், பாகிஸ்தானும் விரிந்த போக்குடையனவாக மாறுகின்றன. ஆகஸ்டு 15-ம் நாளிலிருந்து இந்திய சமஸ்தானங்கள் ஏகாதிபத்திய தொடர்பு நீங்கின சுதந்திர நாடுகளாக ஆகின்றன என்பதும், அவைகள் தம் எதிர்கால நலனைத் தாங்களே முடிவு செய்து அதன்படி நடந்து கொள்வது நல்லது என்றும், அப்படிச் செய்யும் முடிவுகளில் இந்தியாவோடோ, பாகிஸ்தானோடோ அரசியல் அமைப்புச் செயல்களில் ஈடுபட்டு நடத்தல் நல்லது என்றும் அட்லியாலும், லார்டு மௌண்ட் பேட்டனாலும் வற்புறுத்தப்பட்டது, இந்தியா, பாகிஸ்தான் தன்னுரிமை பெறும் போக்கைத் தெள்ளத் தெளிய விளக்குகின்றது.

ஒரு நாடு சுயேச்சைபெற்றநாடாகக் கருதப்படுவதற்கு, அந்த நாடு உள் நாட்டு விவகாரங்கள் எல்லாவற்றிலும் கொண்டிருக்கும் முழு உரிமையும், வெளிநாடுகளோடு போர் தொடுக்கவும், சமாதான செய்து கொள்ளவும், ஒப்பந்தங்கள் ஏற்படுத்தவும், வாணிகத் தொடர்பு கொள்ளவும் ஆன உரிமையும், வெளிநாட்டுத் தூதுவர்களை ஏற்கவும், வெளிநாடுகளுக்குத் தூதுவர்களை அனுப்பவும் ஆன உரிமையும், ஐக்ய நாடுகளின் ஸ்தாபனத்தில் அங்கம் பெறும் உரிமையும் தனக்கென்று கப்பற்படையும், தரைப்படையும், ஆகாயப்படையும் கொள்ளும் உரிமையும் ஆகிய இந்த உரிமைகளையெல்லாம் தனக்கே கொண்டிருப்பதாகும். இந்த உரிமைகளை யெல்லாம் இன்று இந்தியாவும், பாகிஸ்தானும் கொண்டு பிரிட்டனோடு நேசஉறவு ஏற்படுத்திக் கொண்டுள்ளன. ✱

12-ம் பக்கத் தொடர்ச்சி

கடுதாசிலே ராஜிநாமாச் செய்துவிட்டு, ஊரோடு போயிருந்தா, சுகமும் உண்டு, கௌரவமும் உண்டு. என்ன செய்யறது! ஒவ்வொரு சமயத்திலே, கம்பெனியிலே சங்கடம் வருகிறபோது, வாஸ்தவமாச் சொல்றேன், வேலையே வேண்டாம்னு தோணுது. எதுவோ, பெரியவர்க சம்பாதித்து வைத்த நிலம் இருக்கு, சாப்பாட்டுக்குக் குறைவு கிடையாது. கிராமத்திலே போயிருந்து கொண்டா, நாலுபேர் நம்ம எதிரே கைகட்டிண்டு வேலை செய்வா. இங்கே நாம் ஒருவனுக்குக் கைகட்டிண்டு பதில் சொல்ல வேண்டி இருக்கு. என்னமோ, ஆபீஸ் வேலைன்னு, பெரிய கௌரவம்னு நாமா எண்ணிக் கொண்டு, தொல்லைப்படுகிறோம். என்ன இருக்கு கௌரவம்?" என்று சலித் கொள்வார்.

இவ்விதம் ஒவ்வோர் சமயம் ஒவ்வொருவரிடம் ஒவ்வோர் விதமாகப் பேசுவார், மிராசுதார். உழைக்க ஒரு கூட்டம், இருக்கிறது கிராமத்திலே! ஏர்முனையிலே இலாப ஆதிக்கம் செலுத்துபவர், இவ்வளவு சமர்த்தாக நடிக்கிறார்கள். அந்த உழவரோ, விண்ணையும் மண்ணையும் பார்த்துப்பார்த்து விம்முகிறார்கள். உழைக்காத, ஊரிலே வேறு காரியம் இருக்கிற, செல்வமும் சுகமும் பல வழிகளிலே கிடைக்கும் விதமாக வாழ்க்கையை அமைத்துக்கொண்ட, ஜெமீன்தாரர்களுக்கு, எதற்கு, கிராமம் கிராமமாக வயல்கள்!! இவைகளை, விவசாயிகளின் உழைப்பால் வளமாக்கி, இவர்கள் தங்கள் வாழ்வைச் சுகமாகமுள்ளதாக்கிச், சமுகத்தைச் சேறாக்கும் முறை ஏன் இனியும் நீடிக்க வேண்டும்? சொந்த உழைப்பு, கூட்டுஉழைப்பு, அல்லது, மேற்பார்வை என்ற அளவுகூட இல்லால், நக்கு, இரண்டாயிரத்து நானூறு ஏகர்—நஞ்சையும் புஞ்சையுமாக இருக்கு-போய்க்கவனிக்கவோ முடிவதில்லை-நேரம் இல்லை-அந்தப் பயல்களை நம்பி விட்டுவிட்டிருக்கிறேன்-என்று விசாரப்படுவதுபோல ஏன் பேசவேண்டும்? ஜெமீன்தார்களின் இநதப் பேச்சு அடிமைப்பட்டுக்கிடக்கும் உழவர்களுக்கு, காலாகாலமாக அவர்கள் தந்துவரும் அபின்போன்று வேலை செய்கிறது. ஆனால் வறுமை உழவர்களை, நீண்டநாள் தூக்கத்திலிருந்து எழுப்பிவிட்டது. இன்று ஏர்முனை, போர் முனைக்கோலம் கொண்டுவிட்டது.நிலப்பிரபுக்களின் நிலை, மறித்தான் தீரும் — விரைவில்—நிச்சயமாக.

# ஏர்முனை முறை மாறித்தீரும்

ஜெமீன், மிட்டா, மிராசுபாத்யதை வைத்துக் கொண்டுள்ளவர்கள், செய்துவரும், காட்டுராஜாங்கத்தை, நாம் விளக்கி வருகிறோம். இது, கசப்பாகத்தான் இருக்கும் உடைமைக்காரருக்கு. ஆனால் ஊர் சீர்பட வேண்டுமானால், உழவன்மீது ஏற்றப்பட்டுள்ள இந்தப் பழங்காலச் சுமை, கீழே தள்ளப்படவேண்டும். ஏராளமாக வயல்களை, பூர்வீகச்சொத்தாக வைத்துக்கொண்டு, காடு எப்படி வயலாயிற்று, வறண்டு கிடக்கும் வெடிப்பு நிலம் பிறகு எப்படி வளம் பெறுகிறது, என்ற உண்மையையோ, முறையையோ, அறியாமல், அறியவும் முயற்சிக்காமலிருக்கும், இந்த நிலப்பிரபுக்கள், ஆளை மிரட்டுவதிலே மட்டும் அசகாய சூரர்கள். பாடுபடுபவனை, பதைக்கப் பதைக்கப் பேசுவர். அவனுடைய ஓயா உழைப்பினாலேதான் தனக்கு ஒய்யார வாழ்வு நடத்த முடிகிறது என்பதையும் மறந்து, நமது பூமி, நாம் தரும் விதை, கடவுள் அனுப்பும் மழை, இவ்வளவும் உதவிக்குஇருக்க, இந்த உழவன், ஏதோ, பிரமாதமாகப் பாடுபடுவதாகப் பேசுகிறானே, ஏன் அது? என்று ஆச்சரியப்படுகிறார்கள் இந்த அலங்காரர்கள்.

"சுத்த சோம்பேறிடா நீ! மடப்பய, கொஞ்சம் கூடப்புத்தி கிடையாது. அக்கரையும் இல்லே. வேலே, சரிவர, ஒழுங்கா இருப்பதில்லே. பணத்துக்கு மட்டு வந்துவிடுகிறே, பல்லேக்காட்டிக்கொண்டு; மாடுவாங்கோணும் சாமி, கலப்பை வேணும் எரு வேணும்னு கேட்கிறதிலே குறைச்சல் இல்லே. உன் எழவுக்கு, எல்லாம் வாங்கித்தான் கொடுக்கிறேன். என்ன பலன்? வயக்காட்டுக் களையாட்டமா முறைக்கிறயே! ஏண்டா! இவ்வளவு குறைவா இருக்கு மாசூல்? என்ன வாங்கித் தரவில்லே உனக்கு? தலையைச் சொறிந்து கொண்டு நின்னா போதுமா? கலம் அதிகமாயிடுமா? ஏண்டா, இப்படி உசிரை வாங்கித் தொலேக்கிறிங்க. டேய்! நீங்க ஏதுடா, இனிமே, சரியாக இருக்கப்போறது? சொக்கா போட ஆரம்பிச்சாச்சி! சொகுசு கேட்குது! வயலிலே ஏன் இறங்கப் போறிங்க. வாழ்ங்காப் பெலதான் இனி. உன்னிடம் மாரடிச்சிக்கொண்டு சாவதைவிட, பேசாமே, இந்தச் சனியனை வித்துத் தொலேச்சிட்டு, பணமாக்கி, வட்டிக்குப்போட்டாலும், வீடு தேடிப் பணம் வரும்." இப்படி, 'சிடுசிடு' வெனப்பேசுவர் உழைப்பவனிடம். ஆனால் வேறோர் மிராசுதாரரிடம் பேசும்போது! அந்தப்பேச்சுஅலாதி! அது இது!!

"அயன் நஞ்சை சார்! பொன் விளையும்னு பேசுவாங்களே, அது நம்ம நிலத்தைப் போன்ற வயல்களைப் பற்றித்தான். ஆத்துக்கால் பாய்ச்சல். இருபோகம்தாராளமாக வரும். நிலத்தை உழுகிறவனுங்களும், மற்ற ஊர்போல இல்லே, ரொம்ப அடக்கஒடுக்கமானவனுங்க, வம்புகாரனுங்க இல்லே, சொன்னதைச் செய்துவிட்டுக் கொடுத்ததை வாங்கிக்கொண்டு போறவனுங்கதான், வேலே சுத்தமாத்தான் இருக்கும். எதற்கும் நாமும் கொஞ்சம் மிரட்டிவைக்க வேணும்; நம்மபக்கத்து விவசாயிகள், அதெல்லாம், ரொம்பப்பயந்த குடிகள். மீறிப்பேச மாட்டானுக. திருட்டு மிரட்டும் கிடையாது."

இங்க முறையிலே பேசுவார். ஆனால் "வளமான வயல் ஏராளமாக இருக்கு, உங்களுக்கு என்ன குறை. ஒரு பாடும் படாமே, நெல்லேக் கொண்டுவந்து குவிக்கிறு. ஆனந்தமான வாழ்வு. சிரமம் என்ன இருக்கு" என்று இன்னொருவர், பேசுவது கேட்டால், எங்கே, தான் சுகவாழ்வு நடத்துவதாக அவன் எண்ணிக் கொள்கிறானே என்று பயந்து, பேச்சை வேறு விதமாக்குவார் — நிலத்தைக் கட்டிக்கொண்டு மிக்க சிரமப்படுவதாக விளக்குவார்.

"யாருக்குச் சார், தெரியுது, இந்தச் சனியனெல்லாம். என்னமோ சொல்றான், கார் நெல்தான் கணிச்சமா வரு, சம்பா அவ்வளவு சரியாகப் பயிராகாதுன்னு. நாம்ப என்னத்தைக் கண்டோம்.? ஏண்டா, இவ்வளவு குறைச்சலா இருக்குன்னு கேட்டா, பாய்ச்சல் இல்லிங்களே என்கிறான். மழைசரியாகப் பெய்த காலத்திலவு இப்படியே இருந்ததேன்னு கேட்டா, அந்த வருஷம் எரு சரியில்லே என்கிறான். அடுத்த தெருவு அம்பலவாணர் நிலத்திலே மட்டும், எப்படியடா விளைச்சல் அவ்வளவு அதிகமா இருந்ததுன்னு கேட்டா, அது என்ன நிலம்! ஒண்ணும் நம்பர ஆச்சிங்களே," என்கிறான். நமக்கு என்ன விளங்குவது! நாம் வருவதோ வருஷத்துக்கு இரண்டு தடவை, மூன்று தடவை. இங்கே என்ன நடக்குது, என்னநடக்கலேன்னு என்ன புரியுது. பேசாமே, இந்தச்சனியேயே வேண்டாம்னு, வித்துத் தொலேப்போமானு, நம்ம வீட்டுக்காரி ஒரே பிடிவாதம். அது பரம்பரையா இருக்கிற நிலம், அதை விற்கவே கூடாது, அதை வாங்கினவேளே தான், நமக்கு நாலு காசு சேர்ந்தது, என்று பேசறு. ஒரு விதத்திலே அவ சொல்வதும் சரின்னுதான் படறது. கிராமத்திலே நமக்குன்னு கொஞ்சம் நிலபுலம் இருந்தாத்தான் சார், கௌரவம். அதுக்காகத்தான் பார்க்கிறேன். இல்லேன்னு, பணமாக்கிக்கொண்டு போனு, பாங்கிலே போட்டாலும் நல்லா இருக்கும். இல்லே ஏதோ வியாபாரம் செய்தாலும் லாபமாகத்தான் இருக்கும்" என்று முடிப்பார். நிலபுலம் வைத்துக்கொண்டால் நிம்மதி என்றுபேசினவர், ஒரு வியாபாரியாக இருப்பார். அவருக்கு ஒரு அடி கொடுத்தது போலிருக்கும் பேச்சு. வியாபாரம் சுலபம்—விவசாயம் சிரமம் என்று கூறுவார், கிராமப் பிரபு! கிராமத்திலே நிலபுலம் இருக்கும், இவருக்கோ நகரிலே, கம்பெனிகள் இருக்கும்-ஒன்றிலே மானேஜர், ஒன்றிலே டைரக்டர், இன்னொன்றுக்கு ஆலோசகர் இப்படி இருக்கும் அனுவல். ஒவ்வொன்றின் மூலமாகவும், வருவாய் இருக்கும். ஆனால், அந்த 'வருவாய்' கணக்குத் தெரிந்தவன் யாரேனும், 'உங்களுக்கென்னசார், நைசான வேலே-டீசன்டான வரும்படி' என்று, கூறிவிட்டால்போதும், வியாபாரம், நகரம், எல்லாம்தனக்கு விசாரம் தருபவை என்று பேசத் தொடங்குவார்.

"நம்ம நிலத்தைச் சரியாகக் கவனிச்சா, ராஜா போலச் சுகமாக இருக்கலாம். இந்த நாற்றமடிக்கிற நகரத்திலே இருந்து கொண்டு, ஒன்றுக்கு ஒன்பதாகச் செலவு செய்துகொண்டு, ஓயாது டாக்டருக்குப் பணத்தைக் கொட்டிக் கொடுத்துக் கொண்டு, பாழ்பட்டு வருகிறேன். பேசாமே, இந்த வேலேயே வேண்டாம்னு சொல்லி, ஒரு கால்

(11-ம் பக்கம் பார்க்க)

4-ம் பக்கத் தொடர்ச்சி

மெல்லிய குரலிலா?

ஏன்?

ஏனெனில், இருவிதமான குரலில் கூற, இருவகை உண்டு!

என்று பேசிவிட்டுச் சிரித்திருப்பார்கள்.

* * *

பார்த்தால், அழகாகத் தெரியும். அந்தச் செங்கோலை, மற்றோர் முறை பாரும், சற்றுக் கூர்மையுடன்.

ரிஷபம், மட்டுமல்ல, தெரியக் கூடியது.

மாடென உழைக்கும் ஏழைகள் பலரும் தெரிவர்.

இழைப்பு வேலைமட்டுமல்ல தெரியக்கூடியது, உழைப்பை உறுஞ்சுவதால், மேனியில், உலுத்தர்களுக்கு ஏறியுள்ள மினுமினுப்பும் தெரியும்.

ஆயிரம் வேலி நிலம் தெரியும், அதை உழுது பயிரிட்டு அழுது வாழும் பாட்டாளியின் உருவம் தெரியும். அவன்வதையும் குடிசை தெரியும்—அங்கு செங்கோல் செலுத்தும் வழுமைதெரியும்! மிட்டாமிராசு தெரியும், அவர்களின் மோட்டார் பங்களா தெரியும். தங்கத் தட்டும் தெரியும், அதிலே வெண்ணிறத் தூசும் தெரியும்! சுழலும் கண்கள் தெரியும்—சோர்ந்த உடலும் தெரியும்-வியர்வை தெரியும், பொழிந்த இரத்தம் தெரியும்— மத்தடி பட்ட தயிர் போன்ற சித்தம் கொண்டவரின் உருவம் தெரியும்!

மடம் தெரியும்—அங்கு உலாவும், சிவஜடம் தெரியும்! உடலில் அணி தெரியும்—உள்ளே பிணி உள்ளது குறிப்பாகத் தெரியும்.!

தோட்டம் தெரியும், நீராட்டம் தனக்குதவும் குளமும் தெரியும், அக்குளம் பேசுமேல் பலப்பல குட்டிக் கதைகள் தெரியும்.

சைவம் தெரியும் — பலர் அதன் அருள் பெற்று உயர்ந்த 'வகையும்' தெரியும்

மின்னிடும் மோதிரமும், செவியில்குலுங்கிடும் குண்டலமும்,தங்கப் பாதக்குறடும், தாங்கிடும் பக்தர்களும், எனும் இவ்விதக் காட்சிகள் இன்னும் பலப்பல, மின்னி மின்னித் தெரியும், செங்கோலை மீண்டும் மீண்டும் பார்த்தால்!

ஆதீனம் வந்து போனவரின் அடையாளப் பேச்சுப் பேசுவோர், "ஆஹா! அருமை! அருமை! ஆனாலும் சிரமம் அதிகம். ஆதீனம் ஆனந்தம் அடைந்தது, நம்பாக்கியம்" என்று அகம் மகிழாவிட்டாலும் முகம்மகிழ்ந்து பேசும், அடியார்களைக் காணலாம்! மற்றும் பலப்பலதெரியும், ஆனால், மாற்றுக்குறையாத பசும்பொன்னால் செய்தது, உயரம் ஐந்தடி, உன்னதம் வேலைப்பாடு, என்பனவற்றைச்சற்று,மறந்து பார்க்கவேண்டும் செங்கோலை. அப்போதுதான், தெரியும், சிற்றரசன், சீமான், என்போரேனும் மக்களின் சிற்றங்கிளை ப்பாயோ தங்மேலே என்று ஆயாச டைவர், ஆனால்இந்த ஆதீனங்களோ, அச்சம் மிகுந்த மக்கள்தமது அடி தொழ, சர்க்கார், பாதுகாப்புத்தர, பணம் படைத்தோர் படை பலந்தர கொலுவீற்றிருக்கிறார்கள் பயமற்று — கவலையற்று என்பது.

செங்கோல்-ஒரு வேண்டுகோள், காணிக்கை அல்ல! அன்பின் அறிகுறியல்ல! நாட்டு பற்றை விளக்கும் சின்னமல்ல! வேண்டுகோள்!

ஆளவந்தோரே! மக்களைத்தாளில் விழச்செய்து, ஈடில்லாத புகழும் பொருளும் பெற்றுள்ள இந்த ஆதீனங்களைக், கலைத்துவிட வேண்டுமென்று, ஏதேதோ கற்றோரென்று கூறிக்கொள்ளும் ஒருகூட்டம் பேசிடு கால இது. எமது, ஆட்சிமுடியுங்காலம் என்று பேசுகின்றனர். நாங்கள், பரமசாதுக்கள்! உம்மிடம் அபாரமான ஆசை கொண்டவர்கள். சந்தேகமிருப்பின், செங்கோலை மற்றோர் முறைபாரும் ஐந்தடி உயரம், அருமையான வேலைப்பாடு—எமது ஆதீனம், புதுமுறை வேண்டுபவரின் புன்மொழிகளுக்கு ஆளாகாமல், இருக்கச் செய்யும், எமக்கு இறவாவரம் தாரும், எம்மானே, நேருபெம்மானே!இறவாவரம்தாரும் —இன்னுமோர் இருபதாண்டுகளுக்கேனும், இறவாவரம் தாரும்,என்று வேண்டுகோள் விடுத்துள்ளார் சைவ மெய்யன்பர். இந்தக்கோல்கொடுத்த தன்மூலம், தமக்கும், புதியசர்க்காருக்கும், சினேகம் இருப்பதாகக் காட்டிக் கொள்வதன்மூலம்,மேலும் பாமரரை மயக்கவிரும்புகிறார். நேரு சர்க்காரின் நேயரான ஆதீனம், ஏற்கனவே சிவநேசத்தையும் பெற்றிருக்கிறது, எனவே, அதன் ஆதிக்கம் குறையாது, குன்றாது, என்று பாமரர் நம்ப இடமேற்படுகிறதுஇதனால்.

இவ்வளவும் தங்கம்! முற்றும் துறந்தமுனிவர்களின் வழி வழி வந்தோரான, ஆதீனகர்த்தாவின் சுவாதீனத்திலுள்ள ஏராளமானசெல்வத்திலே இது ஒருசிறு, மிகமிகச் சிறு துண்டு!

ஆதீனத்திலே, நவரத்னங்கள் உள்ளனபேழைகளில்!

நவரத்னங்களிலும் மேலான,செந்நெல்மணிவிளையும், வளமான வயல்கள் உள்ளன, ஆதீனஆட்சியிலே.

மனிதகுல மாணிக்கங்களானபாட்டாளிமக்கள், அங்குவதைகின்றனர்.

எத்தர்கள், இந்த ஆதீனகர்த்தாக்களை, சித்தர் என்றுகூற, ஏமாளிகள் மயங்கிக் குவிக்கும் ஏராளமான பணத்திலே, சிதறியதிலே சிறிது, செங்கோலாகி உம்மிடம் வந்திருக்கிறது.

தோடாவாக, பாடகமாக, தோடாக, தொங்கட்டமாக, உருவெடுத்த பொருள் இதனினும் அதிகம்!

இறவாவரம் தரச்சொல்லி, விடுத்துள்ள இந்தச் செங்கோல், எத்தகைய செம்பொன்னால் ஆக்கப்பட்டிருக்கிறதோ, அத்தகைய பொன், குன்றுபோலுள்ள காட்சியைக்காணலாம், இத்தகைய ஆதீனங்கள்,மதஸ்தாபனங்கள் ஆகிய இடங்களிலே, உள்ள பொருளைப் பறிமுதல் செய்தால். அந்தப்பொருளை, நாட்டுமக்கள்வாழ்வை வளமாக்கும் நற்காரியத்துக்குச்செலவிட்டால், செங்கோல் இன்றுள்ளதுபோல ஆதீனம் தரும் அலங்காரக்கோலாக மட்டுமின்றி, மக்களின் வாழ்வை உயர்த்திடும், மாண்பு பெறும். அந்தச்செங்கோலை, அடிக்கடி பார்த்து, அது புகட்டும் பாடத்தைக், கூர்ந்துகவனிக்கவேண்டுகிறோம்.

*

## யூதரும் கானடாவும்

கானடாவில் விஸ்தீரணமான பிரதேசங்கள் கவனிப்பாரற்றுக் கிடப்பதாகவும், கானடாவில் பிறர் குடியேறுவதற்குள்ள வசதிகளை அதிகப்படுத்த வேண்டுமென்றும் செனட் மெம்பர் ரோபக் என்பவர் பேசியிருக்கிறார்.

ஏன், இடமின்றித் தவித்துக்கொண்டும், பலஸ்தீன அரபுக்களுக்குத் தொல்லையாகவும் உள்ள யூதர்களை இங்கு குடியேற்றக்கூடாது?

———

# இரக்கம்

## ஒருபயணம்

**இரக்கம்**

உச்சரிப்பதற்கு எளிய, பதம் இனிமையுங்கூட.

வாழ்க்கையிலே, இரக்கத்தைத் தேடிப்பயணம் நடத்துவதோ, அலை கடலில், பாய்மரமற்ற கலம் செல்வது போலிருக்கும்.

இளமங்கையைப் படுகிழவருக்கு மணமுடிப்பது, தவறு, என்றகொள்கையை மறுப்பார் கிடையாது. இரு இளைஞர்கள், இந்த இலட்சியம்வெற்றி பெற வேலை செய்கிறார்கள்.

எந்தத்தாயும் தன்மகள், வயதுக் கொத்த மணாளனுடன் வாழ்வதைக் கண்குளிரக் காண வேண்டுமென்று தான் விரும்ப முடியும்.

மரகதம், அவ்விதமானவள்தான்! ஆனால், தன் ஒரே மகள், அம்பாளை, ஒரு முதியவருக்குத் தாரச் சம்மதிக்கிறாள்!!

இலட்சிய வாதிகளான, சோமுவும், பாலனும், கோபமும் வருத்தமும் அடைகிறார்கள்.

நேரிலே, சென்று, விளக்கி, இந்தக் கலியாணம் நடைபெற வொட்டாமல் தடுத்தாகவேண்டும் என்று இருவரும் தீர்மானிக்கின்றனர்.

அங்ஙனமே சென்று, பேசிப்பார்க்கின்றனர்.

இதோ, அந்த உரையாடல்.

* * *

சோ:- என்ன அநியாயமம்மா! எப்படி அம்மா, உங்கட்கு மனம் வந்தது; இவ்வளவு, இளமங்கையை, தொண்டுகிழவருக்கு—பணம் இருக்கிறது என்ற காரணத்துக்காக-மணமுடிக்கச்சம்மதிக்கிறீரே-நியாயமா? அந்தப் பெண்ணின் வாழ்வு, சந்தோஷமாக இருக்கமுடியுமா? மனம் எரிமலையாகும்! கண்கள் குளமாகும்!

பா:- எரியோ, குளமோ............

சோ:- ஆமாம்! உடைந்த மனதினர், அங்கெல்லாம்சென்று உயிரைப் போக்கிக்கொள்வார்கள்.

மரகதம்:- எல்லாம் எனக்குத் தெரியும்! என்மகள் விஷயமாக எனக்கு இல்லாத அக்கரை வேறு யாருக்கு வரமுடியும்? நான் எவ்வளவோ யோசித்துத்தான் இந்தமுடிவுக்கு வந்தேன்--தெரியுமா? என் வயிற்றெரிச்சலைக் கிளப்பாதே.

சோ:- எல்லாம் தெரியுமாம், அம்மாவுக்கு! ஏம்மா! உன் மகளுக்கு வயது 18, அந்த மாப்பிள்ளை கிழவனுக்கு இரண்டு குறைய அறுபது— அது தெரியுமா? நரைத்த தலையனுக்கு இந்தப் பூங்கொடியைத் தாரச் சம்மதிக்கிறாய், எல்லாம் தெரியும் என்று வேறு பேசுகிறாய். என்ன தெரிந்தது உனக்கு?..........?

பா:- ஒரு இளமங்கையைக் கிழவனுக்குக் கலியாணம் செய்விப்பதென்பது, அவள் வாழ்க்கையைச் சித்திரவதை செய்வதாகுமே! அம்மா! அது தெரிந்ததா உனக்கு? பொருத்தமற்ற கலியாணத்தால், உன் மகளின் குணமும் நடையும் கூட கெட்டுவிடக் கூடுமே, அது தெரிந்ததா உனக்கு? வயோதிகரை மணந்துவேதனையுடன் போரிடும் யுவதிகளின் விழிகளிலே வழிந்தோடிய நீர் இந்த நாட்டையே அரிக்கத்துவங்குகிறதே அது தெரிகிறதா அம்மா, உனக்கு!

சோ:- அம்மாவுக்கு இதெல்லாம் தெரியாதப்பா, தெரியாது-அவர்கள் ஒரே ஒரு விஷயத்தைத் தெரிந்து கொண்டார்கள்-ஆகவே வேறு எந்த விஷயமும் தெரியவேண்டாமென்று விட்டுவிட்டார்கள்..............?

பா:- எதைத் தெரிந்து கொண்டார்கள்..................?

சோ:- ரூபாய்க்குப் பதினாறு அணா, என்பதை!

மர:- போடா, படித்தமுட்டாளே! பணப்பேய் நான் என்று பரிகாசமா செய்கிறாய்? கற்றதை எல்லாம் கொட்டி அளக்கிறான் இந்தக்காளை. நீங்கள் இருவரும், எல்லாம்தெரிந்ததாக எண்ணிக் கொண்டிருக்கிறீர்கள்-ஆனால் ஏழையின் மனவேதனை எப்படி இருக்கும் என்பதைத் தெரிந்துகொள்ளாத மூடர்கள்—தெரிந்தாலும் என்ன செய்வதென்று தெரியாமல் விரண்டு ஓடும் கோழைகள். பேசவந்துவிட்டார்கள் - பேச. நியாயம்-நேர்மை-இரக்கம் - என்று வார்த்தைகளை வீசுகிறார்கள் - முட்டாள்களே!

[உள்ளே சென்று, ஒரு அழகிய வாலிபனின் புகைப்படத்தைக் கொண்டுவந்து, அவர்களிடம் காட்டிக் கோபமாக]

மர:- அழகைப்புகழ்ந்தான் -கண்களைச்செந்தாமரை என்றான்-புன்னகைக்கு ஈடு இந்தப் பூலோகத்தில் கிடையாது என்றான்-இந்த வீராதி வீரன். இவளை மயக்கினான். சுலபத்திலே ஏமாறுதவளான என்னையும் தன் தேன்மொழியினால், ஏய்த்தான் ...........கலியாணம் நிச்சயம் - யார் எதிர்த்தாலும்-என்று உறுதி பேசினான்.

சோ:- யார்? பெயர்?

மர:- பெயரா? ஆண்!வெறுபெயர் எதற்கு? பெண்ணைப் பராமரிக்கத் தெரியாத ஆடவன்! பெயர், இருக்கும் ராமன், கிருஷ்ணன், கோவிந்தன் என்று-இரணியன், இராவணன் என்று இருக்கப்போகிறது! எவனோ ஒருவன்.

சோமு:- உங்கள் மகளை மணம் செய்து கொள்வதாக இவன் வாக்களித்தானா?

மரகதம்:- சத்தியம் செய்து தந்தான்-ஐந்தாறு சாமிபெயரைக்கூறி-

சோமு:- பிறகு...........?

மரகதம்:- பிறகு என்ன? என் பெண், கன்னியாகத்தான் இருக்கிறாள் இன்றுவரை—இவன் மனைவியோடு மலைவாசம் செய்கிறான்.

பாலு:- ஏன்?

மரகதம்:- இதோ தம்பி பேசினானே பரிகாசமாக என்னை — ரூபாய்க்குப் பதினாறணா என்பது மட்டுந்தான்எனக்குத்தெரியும்என்று. —அதேதான் — பணத்தாசையாலே என் மகளைக் கைவிட்டான்--மலைவாசம் என்றேனே அங்கேமட்டும் அவன் மணம் செய்துகொண்ட மங்காவுக்கு மூன்று பங்களா!

தாமரைக்கண் — பவழ இதழ்— பவுன்நிற மேனி-என்றெல்லாம்பசப்பினானே, அது அவ்வளவும்—அந்தப்பங்களா, தோட்டம், மோட்டார். பணம், கிடைத்ததும் பறந்தோடின.

என்னைப் பணப்பேய் என்று பரிகாசம் செய்கிறாயே, பயனற்ற பல படித்த முண்டமே! நான் பணம் இல்லாததால், கிடைக்கவில்லையே, கிடைத்தால் நாமும் நாலுபேர் போலச் சுகமாக வாழலாமே, என்று அலைகிறேன்என்றேவைத்துக்கொள்-இவன்-பணம்இருந்தும், ஏராளமாக இருந்தும் -- அலைகிறான் மேலும் மேலும் குவிக்க—இவனைக் கூறுவாயா, பணப்பேய் என்று! கூறமாட்டாய்! ஏழையைத்தான் தைரியமாகக் குறைகூறுவாய்-பணக்காரன் முன்பு கோழைகள் தானே நீங்களெல்லாம்.

சோமு:- மிகவும் பொருத்தமாக இருந்திருக்கும் இவன் உமது மகளுக்கு நாயகனாக வந்திருந்தால்.

பாலு:- ஆமாம்! அழகு, வயது, படிப்பு, சகலத்திலும் பொருத்தமிருந்தது.

சோமு:- பணம் இல்லாத ஒரே காரணத்துக்காகவா....

மரகதம்:- அது உண்மையான காரணம்—மனதிலே அதுதான்—வெளிக்கு வேறு காரணம் சொன்னான். வேறே ஜாதியாச்சே என்று வீட்டார் கோபிக்கிறார்கள் என்றான். காதலித்தபோது, ஜாதிபற்றி நான் கவலைப்படுபவனல்ல என்று வீரம் பேசினான்—உன்னைப் போலத்தான். கலியாணம் என்பது அடிமைத்தனமல்ல, அன்பின் வெற்றி, பெண்மையின் பெருமை என்று, ஏதேதோ பேசினான்—உன்னைப் போலத்தான் அவனும் படித்திருப்பான். கடைசியில் கைவிட்டான் — நீங்கள் வேறு ஜாதி, நான் வேறு. எனக்கென்னமோ ஜாதிவித்யாசம் பிடிக்காதுதான்—ஆனால் வீட்டிலுள்ள பெரியவர்களிடம் பணியவேண்டி நேரிடுகிறது என்று கூறி விட்டான்.

சோமு:- முட்டாள்! கோழை!!

மரகதம்:- எதை வேண்டுமானாலும் சொல்லு.

சோமு:- இரக்கமற்றநெஞ்சினன்!

மரகதம்:- தெரிகிறதா அது! என்னடா, அந்தப்பெண்ணை நம்பும்படி செய்தோமே — கைவிட்டால் அது கலங்காதா என்று எண்ணினானா? இரக்கம் காட்டினானா?

சோமு:- அவன் ஒரு இரக்கமற்றவன் தாயே! அதற்காக, நீயும்இரக்கத்தைக் கைவிட்டுவிட வேண்டுமா? உன்மகளைப்படுகுழியில்தள்ளத்துணிகிறாயே இரக்கமின்றி, அது தகுமா?

மரகதம்:- அப்பா! நிதானமாகப் பேசு! யோசித்துப் பேசு! இரக்கம் உனக்குத்துளியும் இல்லை. இருந்தால் என்னை இரக்கமற்றவள் என்று பேசியிருக்கமாட்டாய். இரு, இதோவருகிறேன். (உள்ளே போய்ஒருசரிகைச் சேலையை எடுத்து வந்து காட்டி) பார்! இதுதான், என்வீட்டு அலங்காரஆடை. கடைசி. அப்பா இதுதான் அவளுக்கு இருக்கும் சேலை! இதுகூட, மூன்றுமாதம் பார்வாடியிடம் அடகு இருந்திருக்கிறது — என்கண்ணிலே ஒன்று குருடாகி விட்டதல்லவா! ஏன்?....வறுமைக்கோல் குத்தியதால் தான். ஒடிந்த நாற்காலி, கிழிந்தபாய் அழுக்கடைந்த தலையணை, ஒழுக்குக் கூரை, அரைப்பட்டினி இந்தநிலைமையில் இருக்கும் எங்களிடம் இரக்கம் காட்டினவர்கள் யார்? யாரடா காட்டினார்கள்? ஏழையின் மனம் துடிப்பதை யார்சட்டை செய்தார்கள்? என்மகளின் அழகுக்கேற்ற அந்தஸ்து, இளமைக்கேற்ற நிலைமை, தேடித்தர யார் முன்வந்தார்கள்? என்னை இரக்கமற்றவள் என்று ஏசுகிறாயே, ஏதுமறியாத வாலிபனே! உன்னைக் கேட்கிறேன், பதில் சொல்லு. நான் குடிஇருக்கும் இந்த வீடும், கடன் காரனால் ஏலம் எடுக்கப்பட்டு, நாங்கள் ஊர்க்கோடி சாவடியிலே வாழவேண்டிய கொடுமைக்கு ஆளாகவேண்டியநிலைமை வருகிறதே, இந்த நிலைமையிலிருந்து எங்களைக் காப்பாற்றுபவர் யார்? உன்னால் முடியுமா? இரக்கமுள்ளவனாயிற்றே நீ! ஏலத்தைத் தடுப்பாயா? கடன்காரனின் கோபத்தைப் போக்குவாயா? வறுமையைத் தீர்த்துவிடுவாயா? எங்களுக்குவாழ்வு, மானத்தை இழக்காமல் வாழவழி, செய்துதர முன்வர முடியுமா?

பா:- ஐயோ! பாவம்! கடனாலே கஷ்டப்பட்டதாலேதான், இந்தக் கண்றாவிக் கலியாணத்துக்கு ஒத்துக் கிட்டாங்க.

சோ:— அது சரி—ஆனாலும்— கொள்கையிலே உறுதிஇருந்தா........

மர:—எந்தக்கொள்கையைக் கூறுகிறாயப்பா!

சோ:—பொருத்தமற்ற கலியாணம் கூடாது என்ற கொள்கை........

மர:-அந்தக் கொள்கையை உறுதியாகக் கொண்டு, நாங்கள் தெருத் தெருவாக அலையவேண்டும் என்கிறாய்—அதுதானே—வேறே என்னவாகும் விளைவு—அடே! இரக்கம் உனக்குத் துளியாவது இருந்தால் இதைக் கூறுவாயா?

பா:- ஏம்மா! இந்த வீட்டைக் கூட ஏலத்திலே எடுக்கவேணும்னு கச்சை கட்டுகிற ஆசாமி யாரு— கொஞ்சமும் ஈவு இரக்கம் இல்லாதவன் போலிருக்கே அந்தப் பாவி— யாரு அந்த ஆள்?

மர:- அவரா? அவரை இரக்கமற்றவருன்னு யாரு சொல்லப் போறாங்க! நீதான் சொல்றே—அதுவும் என் எதிரே—அவர் எதிரிலே அதுகூடச் சொல்லமாட்டே. அவரு தாம்பா, இந்த ஊர் முதலாளி ரத்தன்லால்!

சோ:- அடடே, அந்த சேட்டா? வெள்ளிக்கிழமை வெள்ளிக்கிழமை, பசு மாட்டுங்களுக்கெல்லாம் அவத்திக்கீரை வாங்கித் தருகிறாரே........

மர:- ஆமாண்டாப்பா, அவரேதான்—வெள்ளிக்கிழமை பசுவைக் கவனிப்பாரு, சனிக்கிழமை, எறும்புப் புத்துக்குக்கோதுமையும் சர்க்கரையும்போடுவாரு,நாயத்துக்கிழமை பாம்புப் புத்துக்குப் பால் வார்ப்பாரு, என்னாட்டாம் ஏழைக வீட்டை நித்யம் ஏலம் எடுத்தபடியும் இருப்பாரு.

சோ:- படுபாவிப் பய...........

மர:- பேர் அது இல்லைப்பா— கருணாத்மான்னு யாரோ பட்டம் கூடக் கொடுத்தாங்க—என் மக, பேப்பர்லே படித்துச் சொன்னா—

பா:- அது எந்த முட்டாப் பய கொடுத்தானோ தெரியலே அந்தப் பேரு........

சோ:- வாப்பா, போகலாம் — மனசு நிம்மதியாக இல்லை—பிறகு வருகிறோம்........

[வீட்டை விட்டு வெளியே செல்கிறார்கள்.
வீதியில் இரு நண்பர்களும் செல்கையில்........]

பா:- பார்த்தயாப்பா, அந்தசேட், கொஞ்சங்கூட ஈவு இரக்கமத்த பயலா இருக்கறான்.

சோ:- ஆமாம்!........

பா:- அவனுக்குப்போய் கருணாத்மான்னு எவனோ மடையன்........

சோ:- செ! வாயை மூடிக்கிட்டு வாடா! எங்க அப்பாதாண்டா, அந்தப் பட்டம் கொடுத்தார்.

[நண்பனின் நிலை கண்டு, பாலு வாயை மூடிக்கொள்கிறான். மனம் மட்டும் வேலை செய்த

படி இருக்கிறது.

பிறகு இருவரும், அழகி அம்பாளைக் கலியாணம் செய்து கொள்வதாக வாக்களித்து விட்டுத் தவறிய, வாலிபனிடம் செல்கிறார்கள். அவன், சீமான்மகன். இலட்சியவாதி, அதனால் தன் பேச்சின் காரசாரத்தைக் குறைத்துக்கொள்ளவில்லை ]

* * *

சோ:- என்ன இருந்தாலும் நீ செய்தது, சுத்தத் தவறு—இரக்கமற்ற காரியம்!

சீ ம:- அப்படித்தான்நீயும் சொல்லுவாய் — உன்னைப் போன்றவர்களும் சொல்வார்கள்—ஏன்—வேறு யாராவது இதுபோலச் செய்தால் நான்கூட அப்படித்தான் சொல்லியிருப்பேன் — ஆனால் உண்மையில நான் இரக்கமற்றவனல்ல. இரக்கத்துக்கு அடிமைப்பட்டதாலேதான் இந்தக் காரியத்தைச் செய்யவேண்டி இருந்தது.

சோ:- யாரை ஏய்க்கிறாய் இப்படிப் பேசி — அந்தப் பெண்ணின் வாழ்வு பாழாகுமே, பனம் கலங்குமே என்று கொஞ்சமாவது உனக்கு இரக்கம் இருந்திருந்தால், நீ அவளைக் கைவிடுவாயா! பணத்தாசையால்தானே...........

சீ ம:- முட்டாள்டா, நீ! பணத்தாசைக்காகவா அவளை நான் கைவிட்டேன்...........

சோ:- பணம் ஏராளமாகக் கிடைக்கவில்லையா உனக்கு, மங்காவைக் கலியாணம் செய்து கொண்டதாலே...........

சீ ம:- கிடைத்தது.ஆனால், அதற்காக அல்ல நான் அவளைக் கைவிட்டது.

சோ:- வேறே எதற்காம்?

சீ ம: இரக்கம்கொண்டதால்தான். —என் அம்மா, என்ன செய்தார்கள் தெரியுமோ—வீட்டிலே அறைக்குள்ளே தாளிட்டுக் கொண்டார்கள் —சுருக்குக் கயிறு தயாராக இருக்கிறது—ஜன்னல் பக்கமாக நின்று கொண்டு என்னைக் கூப்பிட்டார்கள் ஒரு நாள், மாலை.

சோ:- ஏன்? கூப்பிட்டு?

சீ ம: கூப்பிட்டு!கயிற்றைக்காட்டி, அடே! நான் பிராணத்தியாகம் செய்துகொள்ளப் போகிறேன் — என்று கூறினார்கள்.

சோ:- ஐயோ! ஏன்?

சீ:- நானும் அலறினேன் அப்படித்தான். நம்முடைய குலத்தைக் கெடுக்கும் காரியத்தைச் செய்வதில்லை என்று நீ சத்யம் செய்து கொடுத்தாலு — அதன்படி நடக்க வேணு — இல்லையானு என் பிணத்தைத்தான் காண்பாய் என்று- கோபமாக அல்லடா — அழுது கொண்டே சொன்னார்கள் — என் தாயார்.

சோமு:- இதென்னடாசங்கடம்?

சீ ம:- நான் வெளியே நின்றபடி, கும்பிட்டுக் கூத்தாடினேன். அம்மா! வேண்டாம்! அப்படி எல்லாம் செய்து விடாதீர்கள். தூக்குப் போட்டுக்கொள்ள வேண்டாம். நான் சகிக்கமாட்டேன் என்று நானும் அழுது கொண்டே சொன்னேன். என் உயிர் உன் கையிலே இருக்கிறதடா அப்பா! நீ அந்த வேறே ஜாதிப் பெண்ணைக் கலியாணம் செய்து கொள்வதில்லை என்று சத்யம் செய்தால்தான் நான் கதவைத் திறப்பேன், கயிற்றையும் அவிழ்ப்பேன். இல்லையானால இங்கேயேசாகத்தான் போகிறேன, இதுசத்யம என்றார்கள். நான் என்ன செய்வேன்!

சோ:- தர்மசங்கடமாயிருக்கே!

சீ ம:- கேட்கிறபோது உனக்கே தர்மசங்கடமாக இருக்கிறதே—அந்தக் காட்சியைப் பார்க்கிறபோது எனக்கு எப்படி இருந்திருக்கும்? என்னைப் பெற்றெடுத்து வளர்த்த தாய்—தன் உயிரை—என் எதிரிலே போக்கிக்கொள்ளத் தயாராக இருக்கிறார்கள்—அவர்கள் சாகாமல் இருக்கச் செய்ய என்னால் மட்டுமே முடியும் — அந்தப் பெண்ணைக் கைவிடுகிறாயா, என்னைச் சாகடிக்கிறாயா, இரண்டில் ஒன்று சொலலு, எனறு கேட்கிறார்கள்—அந்த நேரத்தில் என் மனம் என்ன பாடுபட்டிருக்கும்—யோசித்துப் பார்.

தாயைச் சாகவைக்கும் மகனாக வேண்டும், காதலித்தவளைக் கலியாணம் செய்தால்—தாய் என் எதிரே நின்றுகொண்டு உயிர்ப் பிச்சை கேட்கிறார்கள். என்னைப் பெற்று வளர்த் தாய்—என்மீது ஈ எறும்பும் உட் காரவிடாமல் பாதுகாத்த தாய்— என்னைக்கண்டு பெருமை அடைந்து பாராட்டிவந்த என் அன்னை, உயிருக்குயிராக என்னை நேசித்த தாய் உயிரைப் போக்கிக் கொள்கிறேன் உதவாது வேறுஜாதிப்பெண்-என்று கூறுகிறார்கள் அம்மா! இந்த ஒரு நிபந்தனை ... வேறே எது வேண்டுமானாலு கூறுங் கள் என்று நான் கெஞ்சினேன்.

சோ:- என்ன சொன்னார்கள் அதற்கு?

சீ ம:-கேள் அதை!மகனே! உன்னை நான் இதுவரையில் இன்ன எனக்குத்தரவேண்டும் என்றுகேட் துண்டா? இதுதான் முதல் தடவை கடைசி தடவையும் இதுதான் — உன்னைப் பெற்றெடுத்ததாய், உன்னை உயிர்ப்பிச்சை கேட்கிறாள். தரச் சம் மதமா—அல்லது—தாய் பிணமானா லும் சரி என்று கல்நெஞ்சம் கொண்டு, என்னைச் சாகடிக்கப் போகிறாயா என்று கேட்டார்கள் என்மனம் என்னபாடு பட்டிருக்கும் .... .... என்ன சொல்லியும் கேட்க வில்லை—என்தாயை இழக்க எனக் கெப்படித் துணிவு வரும்—கொலை தொழில் புரிபவனும் தன் தாயிடம் இரக்கம் காட்டுவானே! நான், என் தாயைக் காப்பாற்ற வேண்டும் என் பதற்காகத்தான், அம்பாளைக்கைவிட் டேன் — இல்லையேல், தாயைச் சாகடித்தவன், பெற்றதாய் சாகும் படியான காரியம் செய்த கொடிய வன், இரக்கம் துளியுமற்றவன் என்று ஊர் தூற்றியிருக்கும், நீயே கூட ஏசுவாய்-என்மனமு என்னைச் சுடும். அதனால்தான், நான் என் காதலைத் தியாகம் செய்தேன்-இரக் கமற்றதால் அல்ல-இரக்கம் கொண் டதால் .... .... என்ன சொல்கிறாய் இப்போது .... ....?

சோ:- என்ன சொல்வதென்றே தெரியவில்லையே எனக்கு. நான், அம் பாளின் தாயை இரக்கமற்றவள் என்று எண்ணி ஏசினேன் — அவள் உன் இரக்கமற்ற தன்மையால் தன் மகளின் வாழ்வு கெட்டுவிட்டது என்று கூறினாள்-நீயோ உன் தாயா ரைக் காப்பாற்றுவதற்கேஇந்தக்காரி யத்தைச் செய்திருக்கிறாய்—ஆகவே

(2-ம் பக்கம் பார்க்க)

Edited Printed Published by C. N. Annaduarai, M. A., at "Dravida Nadu" Press,
317—319 Hodgsonpet Conjeeveram.